MADRAS

கிராம நலம்

(மாதப் பத்திரிகை)

சென்னை அரசாங்க சமுதாய அபிவிருத்தி
இலாகா வெளியீடு

மாடி—1	மார்ச், 1956	படி—6

கதர் அபிவிருத்தி

கிராம வாழ்க்கையை வான வெளிக்கு ஒப்பிடுவோமானுல், கதரை அதன் மத்தியில் விளங்கும் சூரியனென்று சொல்லலாம். கதரிடமிருந்து பெறும் உஷ்ணத்திற்கும் உணவுக்கும் பிரதியாக அதற்குப் பக்கபலமாய் இருந்து வரும் பல்வேறு கைத்தொழில்களை இரகங்கள் என்று அழைக்கலாம். கதர் இல்லையேல் பிற தொழில்கள் ஓங்கமுடியாது.

—மகாத்மா காந்தி

1956-57-ம் வருஷத்திய வரவு-செலவுத் திட்டம்



....சென்னை அரசாங்க நிதி அமைச்சர், 1956, பிப்ரவரி 27-ந் தேதியன்று, சென்னை சட்டசபையில், 1956–57-ம் ஆண்டு வரவு-செலவுத்திட்டத்தைச் சமர்ப்பித்தார்....

[1956-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 27உ-யன்று, சென்னை சட்ட சபையில், நிதி அமைச்சர் திரு. சி. சுப்ரமணியம் அவர்கள் நிகழ்த்திய உரையின் சில பகுதிகள் கீழே தொகுக்கப்பட்டுள்ளன.

—ஆசிரியர்]

சபாநாயகர் அவர்களே,

1956–57-ம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தையும், நடைமுறை ஆண்டின் திருத்தப்பட்ட மதிப்பீடுகளையும் இச் சபை முன் சமர்ப்பிக்க முன் வந்துள்ளேன்.

விவசாயம்

உணவு தான்யங்களின் உற்பத்தியை 7 லட்சம் டன் வரை அதிகப்படுத்துவதும், கரும்பு உற்பத்தியை 10 லட்சம் டன் வரை அதிகப்படுத்துவதும், விவசாயத் துறையில் நாம் இரண்டாவது திட்டத்தில் ஏற்றுக்கொண்டுள்ள இலக்குகள். நீர்ப்பாசன விஸ்தரிப்பில் அநேகமாக எல்லையை அடைந்து விட்டோம். ஆதலால் விவசாய முறைகளில் முன்னேற்றம் காண்பதன் மூலமே, நாம் உற்பத்தியைப் பெரும்பாலும் பெருக்க முடியும். ''பிரைமரிப் பண்ணை வித்துக்கள்'' (Primary Seeds) உற்பத்திக்காக ஒவ்வொன்றும் 25 எக்கரா அளவு கொண்ட 400 விதைப் பண்ணைகளை அரசாங்கமே ஆரம்பித்து சொந்தமாக நடத்தத் திட்டத்தில் உத்தேசிக்கப் பட்டுள்ளது. இவ்விதைகளைப் பெருக்குவதன் மூலம், ராஜ்யத்தின் உடனடியான தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியும். வரவு-செலவுத் திட்ட ஆண்டில், பெரும்பாலும் தேசிய வளர்ச்சித் திட்டப் பகுதிகளில் 50 விதைப் பண்ணைகள் திறக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. பூச்சிகளையும் நோய்களையும் தடுக்க, செடி பாதுகாப்பு நிலையங்கள் நான்கு திறக்கப்படும். இந்த நிலையங்களில் பூச்சி நோய்களைத் தடுக்க மருந்துகளும் கருவிகளும் சேகரித்து வைத்து நோய் பரவும் இடங்களுக்கு உடனடியாக அனுப்பப்படும். வரும் ஆண்டில் நெல்லிக்குப்பத்தில், கரும்பு ஆராய்ச்சி மத்திய நிலையம் ஒன்றும், திருச்சியில் ஒரு துணை நிலைய

மும் திறக்கப்படுகின்றன. அதிக சர்க்கரைச் சத்துள்ள கரும்புகள் உற்பத்தியைப் பெருக்க ஒரு திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. சிறு தான்யம் (Millets) முந்திரி ஆகிய வற்றுல் அபிவிருத்தி காணவும், வெற்றிலைத் தோட்டங்களில் நோயைப் போக்கவும் ஆராய்ச்சித் திட்டங்கள் நடத்த அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது. தோட்டக்கலை அபிவிருத்திக்காகத் தாராளமாகக் கடன்கள் தரவும் வசதி செய்யப்படுகிறது. விவசாயக் கல்லூரியில் இப்பொழுது 108 மாணவர்கள் சேர்க்க இடமுள்ளது ; இனி 162 மாணவர்கள் சேர்க்க வசதி விஸ்தரிக்கப்படுகிறது. மலபார் மாவட்டத்தில் உள்ள அட்டப்பாடி பள்ளத்தாக்கை அபிவிருத்தி செய்ய, விவசாயிகள் குடியேற்றத் திட்டம் ஒன்று அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்தப் பள்ளத்தாக்குக்கு, ஒரு புதுச் சாலை அமைக்கும் வேலை சென்ற ஆண்டு தொடங்கித் திருப்திகரமாக நடந்து வருகிறது. தீவிர உர உபயோகத் திட்டங்களில், அம்மோனியம் சல்பேட் சுமார் ஒரு லட்சம் டன் வரை விநியோகிக்க வகுக்கப்பட்டுள்ள திட்டம் குறிப்பிடத்தக்கது.

கால்நடை அபிவிருத்தி

கிராமப்புறங்களில் கால்நடைகள் அபிவிருத்தியில் நாம் முக்கிய கவனம் செலுத்தவேண்டும். ஆனால் நல்ல ரகக் காளைகள் போதுமானவை நம்மிடமில்லை ; போதுமான அளவு, அவற்றை நாம் பெருக்கவேண்டும். இதுதான் கேந்திர கிராமத் திட்டத்தின் (Key Village Scheme) முக்கிய நோக்கம். இத்திட்டத்தின் கீழ் சாதாரண கிராமக் காளைகளைக் காயடித்து விட்டு நல்ல ரகக் காளைகளைக் கொண்டும் செயற்கைக்கரு முறை மூலமாகவும் நல்ல ரகக் கால்நடைகள் உற்பத்தி செய்யப்படும். இதன் மூலம் கிராமங்களில் உள்ள கால்நடைகளின தரம் உயரும். வரும் ஆண்டில் இத்திட்டத்தை மேலும் 54 கிராமங்களில் பரப்புகிறோம். இத்திட்டம் நடக்கும் கிராமங்களில் பிறக்கும் சுமார் இரண்டாயிரம் சேங்கன்றுகள் பராமரிப்புக்காக, ஒவ்வொன்றுக்கும் மாதம் பத்து ரூபாய் வீதம் மான்யம் தரப்படும். இந்த உயர்ந்த ரகப் பொலிகாளைகள், கேந்திர கிராமங்களுக்கு வெளியே, விஸ்தரிப்பு நிலையங்களில் உபயோகிக்கப்படும். இத்தகைய நிலையங்கள் ஏழு, வரும் ஆண்டில் திறக்கப்படுகின்றன. நகரப் பகுதிகளில், செயற்கைக் கருமுறை நிலையங்கள் இன்னும் ஐந்து திறக்கப்படுகின்றன. புதிய கால்நடைப் பண்ணை ஒன்று ராமநாதபுரம் மாவட்டத்தில் திறக்கப்படும். பழைய பண்ணைகள் பல, மேலும் அபிவிருத்தி செய்யப்படும். கால்நடைப் பராமரிப்புக் கல்லூரியில் கல்லூரிப் படிப்புக்கு 80 மாணவர்களைச் சேர்க்க இப்பொழுது இடமுள்ளது. இனி 120 மாணவர்களைச் சேர்க்க வசதி செய்யப்படும். கம்பவுண்டர் பயிற்சிக்கு இப்பொழுதுள்ள 55 மாணவர்களுக்குப் பதிலாக 100 மாணவர்களைச் சேர்க்க இடமிருக்கும். சென்னை நகரத்தில் பால் பண்ணை அமைக்கும் திட்டம், இதற்கென நியமிக்கப்பட்டுள்ள விசேஷ அதிகாரியால் வகுக்கப்பட்டு வருகிறது. வரும் ஆண்டில் திட்டம் தொடங்கும். இத் திட்டத்தின்படி, சுமார் 4,000 கறவைப் பசுக்கள் கொண்ட ஒரு பண்ணை சென்னை அருகில் உள்ள எருக்கஞ்சேரியில் திறக்கப்படும். நகரத்திற்குத் தேவையான பாலைத் தந்துதவ இது துணை செய்யும். பண்ணையில் மேய்ச்சலுக்குத் தேவையான புல் வளர்க்க உதவ, நகரத்தின் கழிவு நீர் இப்பண்ணைக்குத் திருப்பப்படும். சுமார் 6,000 கோழிகள் கொண்ட கோழி அபிவிருத்திப் பிரதேசப் பண்ணை ஒன்று வரும் ஆண்டில் கோயம்புத்தூரில் திறக்கப்படும். இத்திட்டத்துடன் சேர்ந்த 5 இணைப்பு விஸ்தரிப்பு நிலையங்கள் பல்வேறு பகுதிகளுக்கும் பயன்படும்.

சமுதாய அபிவிருத்தித் திட்டங்கள்

இரண்டாவது திட்டத்தின்படி, ராஜ்யம் முழுவதும் தேசிய வளர்ச்சித் திட்டம், அல்லது சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கொண்டுவரப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதன் மூலம் தான், கிராமவாரியாக வகுக்கப்படும் " ஜில்லாத் திட்டங்கள் " பெரும் அளவுக்கு நிறைவேற முடியும். இதற்காக இனியும் 350 புது வட்டாரங்கள் (Blocks) ஏற்படுத்தவேண்டும். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இராமநாதபுரம் மாவட்டப் பகுதிகளில், ஏப்ரல் மாதத்தில் 4 புது வட்டாரங்களும், அக்டோபர் மாதத்துக்குள் ராஜ்யத்தின் பல்வேறு பாகங்களிலும் 22 வட்டாரங்களும் ஏற்படுத்த வரவு-செலவுத் திட்டத்தில் வசதி செய்யப்பட்டுள்ளது. இது தவிர ஆண்டு இறுதியில் 28 வட்டாரங்கள் நிறுவுவதற்கும் பணம் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த 28 வட்டாரங்களை ஏற்படுத்துவதற்குப் பூர்வாங்க வேலைகளை வரவு-செலவுத் திட்ட ஆண்டிலேயே செய்யவேண்டும். இவை அனைவற்றிற்குமாக 2 கோடியே 78 லட்ச ரூபாய் செலவு செய்யப் பணம் ஒதுக்கப்பட்டுள்ளது. தேசிய வளர்ச்சித் திட்டங்கள் அமுலுக்கு வராத இடங்களின் நன்மைக்காக நடத்தப்படும், ஸ்தல அபிவிருத்தித் திட்டங்கள் (Local Development Works) இந்த ஆண்டு திருப்திகரமாகவே நடந்துள்ளன. இவற்றிற்கு முதலில் 83 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது ; பின்னர் இது ஒரு கோடியே 34 லட்ச ரூபாயாக உயர்த்தப்பட்டது. இதுவும், மக்கள் ரொக்கமாகத் தந்த நன்கொடையும் சேர்ந்து, சுமார் 185 லட்ச ரூபாய் மதிப்புள்ள வேலைத் திட்டங்கள் இந்த ஆண்டில் நடந்தேறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வரும் ஆண்டில், இத் திட்டத்தின் கீழ் செலவு செய்ய சுமார் 80 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்தொகையுடன் மக்களுடைய பங்கையும் சேர்த்துச் சுமார் ஒரு கோடி 20 லட்ச ரூபாய் மதிப்புள்ள வேலைகள் செய்ய முடியும். தேசிய வளர்ச்சித் திட்டத்தின் கீழ் வரும் பகுதிகள் பரவப் பரவ, இந்த இனத்தின் கீழ் செலவு படிப்படியாக குறையும்.

கூட்டுறவு

கூட்டுறவுத் துறையில், விவசாயக்கடன் உதவி, பண்டக வசதிகள், கூட்டுறவு விற்பனை முறை ஆகியவை குறித்து, விவசாயக்கடன் உதவி ஆராய்ச்சிக் கமிட்டி (Rural Credit

Survey Committee) செய்துள்ள சிபார்சுகளில் முக்கிய மான சிலவற்றை நடத்திவைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. விவசாய நிதி உதவியில் குறைந்தது 20 சத விகிதத்துக் கும், விற்பனைக்குரிய விவசாய மிச்சப் பொருட்களில் 10 சத விகிதத்துக்கும் கூட்டுறவுப்பகுதி பொறுப்பேற்க, அவசியமான ஸ்தாபன அமைப்பை நாம் உருவாக்க வேண்டும். மத்திய அமைப்புகளையும், அவற்றின் கிளை அமைப்புகளையும் நாம் நிறுவ வேண்டும். ராஜ்ய பண்டக நிலையம் ஒன்றை அரசாங்கமே நிறுவி நடத்தத் திட்டமிடப் பட்டுள்ளது. அதன் பங்கு மூலதனத்துக்காக 30 லட்ச ரூபாய் தொகை வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப் பட்டுள்ளது. மூன்று கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் பங்கு மூலதனத்துக்காக 30 லட்ச ரூபாயும் கூட்டுறவு விற்பனை முறைகள் அபிவிருத்திக்காக 10 லட்ச ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளன. இத் திட்டங்களை நடத்தும் ஊழியர் களைத் தயார் செய்ய, மதுரையில் ஒரு புதிய பயிற்சி நிலையம் நிறுவப்படுகிறது. சென்னையிலுள்ள பயிற்சி நிலையம் கல்லூரியாக உயர்த்தப்படுகிறது. கூட்டுறவு முறையில் வீடுகள் கட்ட, நகர சங்கங்களுக்குக் கடன் தர 56 லட்ச ரூபாயும், தொழிலாளர் வீடு கட்டும் சங்கங்களுக்கு மான்யமாகவும் கடனாகவும் தர 10 லட்ச ரூபாயும் ஒதுக்கப் பட்டுள்ளன.

கிராமங்களுக்கு மின்சார வசதி

நம்முடைய மின்சார திட்டம் நல்ல முறையில் முன்னேறி வருகிறது. 11 கோடியே 47 லட்ச ரூபாய் இத் திட்டங்களுக்காக, இந்த ஆண்டின் திருத்தப்பட்ட மதிப்பீடு களில் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இத்தொகை வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் நாம் முதலில் கணக்கிட்டிருந்த தொகைக்கு ஒப்பானதே. பெரியாறு திட்ட வேலை முழு மூச்சில் நடக்கிறது. குந்தா திட்டத்தில் பூர்வாங்க வேலைகள் தொடங்கிவிட்டன. இந்த ஆண்டில் சுமார் 600 கிராமங் களுக்கு மின்சார வசதியைப் பரப்ப முடியும் என்று நாம் எதிர்பார்த்தது முற்றிலும் நிறைவேறிவிடும். ஏற்கெனவே ஜனவரி மாதக் கடைசிவரை 550 கிராமங்களுக்கு இவ்வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. வரும் ஆண்டுக்கு சுமார் 13 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளோம். இதில் 2 கோடி ரூபாய் குந்தா திட்டத்துக்குச் செலவாகும். இத் திட்டத் தின் முதலாவது கட்டம் இரண்டாவது திட்ட காலத்துக்குள் ளாகவே சுமார் 23 கோடி ரூபாய் செலவில் பூர்த்தியாகி விடும். இதனால் 145,000 கிலோவாட் சக்தி கிடைக்கும். கிராமங்களுக்கு மின்சாரத்தைப் பரப்பும் திட்டம் வேகம் குறையாது முன்னேறிவரும். இந்த வரவு-செலவுத் திட்ட ஆண்டில் மேலும் 600 கிராமங்கள் மின்சார வசதியைப் பெறமுடியும் என்று எதிர்பார்க்கலாம். மேட்டூரில் நீர்ப் பாசனத்திற்காக விடப்படும் தண்ணீரை உபயோகப்படுத்தி, மேலும் பருவ கால மின்சார உற்பத்தியை அதிகரிக்க முடியுமா என்பது குறித்து ஆராய்ச்சி நடந்து வருகிறது. நாம் அனைவரும் மிகுந்த ஆவலுடன் எதிர்பார்ப்பது போல், நெய்வேலி பழுப்புக்கரித் திட்டம் வெற்றிகரமாக விரைவில் நிறைவேறினால் இந்த மின்சார சக்தி அனைத் தையும் நிலைப்படுத்தித் தொழில் துறையில் பயன்படுத்த முடியும்.

குடிதண்ணீர் திட்டம்

நம்முடைய கிராமக் குடி நீர் விநியோக திட்டத்தில் மூன்று பகுதிகள் உண்டு. ஒரு பகுதி, முழுதும் ராஜ்ய நிதியிலிருந்து நடத்தப்படும் விரிவான திட்டம். இரண்டா வது பகுதி, காலரா நோய் பரவலாக உள்ள இடங்களின் நன்மைக்காக வகுக்கப்பட்டுள்ள தேசிய குடி நீர் விநியோகத் திட்டம். இதில் செலவில் பாதி, மத்திய அரசாங்கத்திடமிருந்து நமக்கு மான்யமாகக் கிடைக்கிறது. மூன்றாவது பகுதி, ஸ்தல முன்னேற்ற திட்டம். இதன் கீழ் முழுச் செலவையும் மத்திய அரசாங்கம் ஏற்றுக் கொள்கிறது. கூடுமான இடங்களிலெல்லாம் கிராமவாசி களிட மிருந்தும் பஞ்சாயத்துக்களிட மிருந்தும் நன்கொடை வசூலித்தும் ராஜ்ய அரசாங்கம் இம் மூன்று திட்டங்களையும் ஒரே அமைப்பின்கீழ் நடத்தி வருகிறது. இந்த மூன்று இனங்களுக்கும் சேர்ந்து 95 லட்ச ரூபாய் வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது. மக்களிடமிருந்து கிடைக் கும் நன்கொடைகளுடன் சேர்ந்து, மொத்தம் சுமார் 1 கோடியே 50 லட்ச ரூபாய் மதிப்புள்ள வேலைகள் இந்த ஆண்டில் நடக்கும் என்று எதிர்பார்க்கலாம். நகரக் குடி நீர் விநியோகத்தைப் பொருத்தவரை, 15 நகராட்சி (முனிசிபாலிடி)களில் வேலைகள் தொடங்கியுள்ளோம். இயந்திர வடிகட்டிகள் அமைப்புத் திட்டம் அடங்கலாக, பல அபிவிருத்தித் திட்டங்களை சென்னை கார்ப்பரேஷனும் தொடங்கியுள்ளது. நடப்பு ஆண்டில், இத்துறையில் அவ்வளவு வேகமாக முன்னேற்றம் ஏற்படவில்லை ; இதில் ஒதுக்கியிருந்த 1 கோடியே 74 லட்ச ரூபாயில் ஒரு பகுதி செலவாகாமல் நின்றுவிடலாம். எஞ்சிய தொகை, இந்த வரவு-செலவுத் திட்ட ஆண்டில் ஒதுக்கியுள்ள 1 கோடியே 45 லட்சத்துடன் சேர்க்கப்பட்டு, வேலைகள் மிகவும் துரிதப் படுத்தப்படும்.

கைத்தறித் தொழில் வளர்ச்சி

இந்த ஆண்டில் சேர்க்கப்பட்டுள்ள புதுத் திட்டங்களைக் கனம் அங்கத்தினர்கள் ஆராய்ந்தால், கிராமக் கைத் தொழில்கள், சிறு கைத்தொழில்கள் ஆகியவற்றின் வளர்ச்சியில் நாம் இந்த ஆண்டில் மிகத் தீவிர முயற்சி எடுக்க முன்வந்துள்ளோம் என்பதை உணர்வார்கள். இத் துறையில் அபிவிருத்தி எவ்வாறு ஏற்பட வேண்டுமென்பது பற்றி சமீபத்தில் வெளியான கார்வே கமிட்டி அறிக்கை எடுத்துக் காட்டியுள்ளது. கைத்தறித் தொழிலுக்குப் பூர்ண பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று நாம் வற்புறுத்தி வந்ததை, இக்கமிட்டியும் பலமாக ஆதரித் துள்ளது கண்டு நாம் திருப்தி அடையலாம் ; ஆலைகளுக்கு இப்போதுள்ள உற்பத்தி சக்தியை மேலும் பெருக்காமல், தற்போதைய உற்பத்தி அளவையே உச்ச நிலையாக நிர்ணயிக்க வேண்டுமென்றும், இதற்கு மேற்பட்ட துணி உற்பத்தியைக் கைத்தறிக்காக ஒதுக்க வேண்டுமென்றும்

அக்கமிட்டி மேலும் சிபாரிசு செய்துள்ளது. கைத்தறித் தொழில் அபிவிருத்திக்காக, திட்ட காலத்தில் 80 கோடி ரூபாய் செலவு செய்யவேண்டுமென்று கமிட்டி சிபாரிசு செய்துள்ளது. அதில் இந்த ராஜ்யத்தின் பங்கு 22 கோடி ரூபாய் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. நாம் வரும் ஆண்டில் நடத்த விருக்கும் பல்வேறு திட்டங்களுக்கும் அகில இந்திய கைத்தறி போர்டின் அங்கீகாரத்தை இன்னும் பெறவில்லை. வரும் ஆண்டில் அவை ஏற்றுக் கொள்ளப்படும். இத்திட்டங்களுக்காக மத்திய தீர்வை நிதியிலிருந்து சுமார் ஒன்றரை கோடி ரூபாய் தரப்படும். பொதுவாகக் கூட்டுறவு உற்பத்தியையும் விற்பனை ஸ்தாபனங்களையும் பெருக்கி இத்துறையில் சரிபாதி கைத்தறிகளை கூட்டுறவு அமைப்பின்கீழ் கொண்டுவருவது; ஆலைத் துணியுடன் சமமான நிலையில் கைத்தறித் துணி போட்டியிடக்கூடிய அளவுக்கு கைத்தறித் துணி உற்பத்தி முறைகளையும் துணி ரகங்களையும் அபிவிருத்தி செய்வதுடன், மான்யம் அளித்து விற்பனை விலையைக் குறைப்பது ஆகிய முறையிலே அபிவிருத்தித் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. கைத்தறித் தொழிலின் நிலை முன்பு மோசமாயிருந்தது ; இப்பொது முன்னேற்றம் அடைந்துள்ளது என்பதில் நாம் திருப்தி கொள்ளலாம். இப்பொழுது வகுக்கப்பட்டுள்ள திட்டங்களையும் நடத்தியபின், இந்த ராஜ்யத்தில் உள்ள 6 லட்சம் கைத்தறி நெசவாளர்களும் தங்கள் எதிர்காலத் தைப்பற்றி தைரியமும் நம்பிக்கையும் கொள்ளலாம் என நாம் எதிர்பார்க்கலாம்.

கதர் அபிவிருத்தி

வேலையின்றி உள்ள விவசாயத் தொழிலாளருக்கு வேலை தரும் முறையில், கதர் உற்பத்தியை கணிசமாகப் பெருக்க முடியும் என்று கார்வே கமிட்டி சிபாரிசு செய்து, இதற்காகத் திட்ட காலத்தில் செலவு செய்யப் பெருந் தொகையைக் குறித்துள்ளது. இத்துறையில் மேலும் அபிவிருத்தி, அம்பர் சர்க்கா மூலம் மட்டுமேதான் நடக்க வேண்டுமா என்பது குறித்த விவாதம் இன்னும் தீரவில்லை. மொத்தமாக ஒதுக்கியுள்ள தொகையை ராஜ்யங்களுக்குப் பிரித்துத் தருவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது இந்த விவாதத்தினுல்தான் என்று தோன்றுகிறது. இதற்கிடையில் 12,500 நூல் நூற்போருக்கும் 400 நெசவாளருக்கும் உதவ, உடனடியாக 25 புது கதர் அபிவிருத்தி நிலையங்கள் திறக்கப்போகிறோம். சாதாரண சர்க்காக்களையும், துணைப் பொருட்களையும் உற்பத்தி செய்து, நம் கிராமங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய 5 தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்படும்.

கிராமக் கைத்தொழில்கள்

கிராமக் கைத் தொழில்களைப் பொருத்தவரை, தாராளமாக நிதி உதவி செய்தும், அபிவிருத்தி செய்யப்பட்ட சாதனங்களையும் கருவிகளையும் தந்து அவற்றின் விலையைப் பல தவணைகளாக வசூலித்தும், மூலப் பொருட்களை அடக்க விலைக்குத் தந்தும், தொழிற்சாலைகளைக் கட்டக் கட்டணம் இன்றி நிலம் தந்தும், கிராமக் கைத் தொழிலாளருக்கு உதவத் திட்டமிடப்பட்டுள்ளது. அரிசி கைக் குத்தல், கிராமச் செக்குகளில் எண்ணெய் ஆட்டுதல், பருத்தி அடித்தல், தோல் பதனிடுதல், தேனீ வளர்த்தல் போன்ற கிராமத் தொழில்களை ஆதரித்து வளர்க்கத் திட்டங்களும் வகுக்கப்பட்டுள்ளன. கிராமக் கைத் தொழிலாளிக்கு பயிற்சி தர, பல நோக்கத் தொழில் நிலையங்கள் சிலவும் திறக்கப்படும்.

குடிசைத்தொழில் கைப்பணிப் பொருட்கள்

குடிசைத் தொழில் கைப்பணிப்பொருட்களைப் (Handcrafts) பொருத்தவரை, பம்பாய், கல்கத்தா, டில்லி நகரங்களில் விற்பனை நிலையங்கள் திறக்கத் தீர்மானிக்கப் பட்டுள்ளது. வெண்கல சாமான்கள், கத்தி, கரண்டி போன்ற சாமான்கள், காகிதத்தில் செய்த பொம்மைகள், பனந் தும்பு சாமான்கள், பிரம்பு, மூங்கில் சாமான்கள், கம்பளிகள், பூ பின்னல்வேலை பொருள்கள், கண்ணாடி வளையல்கள் ஆகிய பொருட்களை உற்பத்தி செய்யவும் அத் துடனேயே அத்தொழில்களில் பயிற்சியளிப்பதற்கும் பல நிலையங்கள் திறக்கப்படும். மலையாளத்தில் தென்னை நார்த் தொழில் அபிவிருத்திக்காக கூட்டுறவு முறையில் சில திட்டங்களும் வகுத்துள்ளோம்.

சிறு தொழில்கள்

சிறு தொழில்கள் அபிவிருத்திக்காக, நாம் பல முனையிலிருந்து முயற்சி எடுக்கத் திட்டமிட்டுள்ளோம். உத்தரவாத எல்லையைக் கடுமையாக வற்புறுத்தாமல், தாராளமாகக் கடன்கள் தர அனுமதிக்கும் முறையில் "அரசாங்க தொழில் நிதி உதவிச் சட்டம்" திருத்தப்படுகிறது. இந்த மசோதா, இந்தக் கூட்டத்திலேயே ஆலோசனைக்கு வரும். இத்துறையில் கடன் வழங்க 20 லட்ச ரூபாய் ஒதுக்கியுள்ளோம். இயந்திரங்களைத் தவணை விலை முறையில் தந்துதவத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக 6 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. புதுத் தொழில்களுக்கு மின்சார வசதி தரவும், மின்சார சக்தி பரப்பும் கம்பிகள் போடும் செலவைக் குறைக்க மான்யம் தரவும், வசதி செய்யப்பட்டுள்ளது. ஐந்து புதுத் தொழிற் பள்ளிகள் திறக்கப்படுகின்றன. இப்போதுள்ள பல தொழிற் பயிற்சிக் கூடங்களில் (பாலிடெக்னிக்) அபிவிருத்திகள் செய்து, அவற்றில் அனுமதிக்கக்கூடிய மாணவர்கள் எண்ணிக்கையை இருமடங்காக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. தச்சர், கருமான், ஆகிய தேர்ச்சிபெற்ற தொழிலாளர், மோட்டார் வாகனங்களில் கிராமம் கிராமமாகச் சுற்றுப் பிரயாணம் செய்து, கிராமத் தொழிலாளருக்கு உதவி செய்யவும் அவர்களுக்குச் சாதனங்கள், கருவிகள், தந்துதவவும் ஒரு திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. கிண்டி, பாலக்காடு, விருதுநகர் ஆகிய ஊர்களில் மூன்று தொழிற் பண்ணைகள் நிறுவும் வேலை இப்பொழுது தொடங்கியுள்ளது. நான்காவது பண்ணை ஒன்று அடுத்த ஆண்டில் நிறுவப்படும் ; எந்த ஊரில் என்பது இன்னும் முடிவு செய்யப்படவில்லை. இத் தொழிற் பண்ணைகளில், தொழிற்சாலைக் கட்டிட வசதிகள், போக்கு வரத்து சாதனங்கள், மின்சாரம்,

தண்ணீர் வசதி, சுகாதாரம், பழுது பார்க்கும் வசதிகள், முதலிய எல்லா வசதிகளும் செய்து கொடுக்கப்படும். தற்போதைக்கு அவை அரசாங்கத்துக்குச் சொந்தமாக இருக்கும். ஆனால் பண்ணைகள் வளர வளர, அவற்றின் நிர்வாகத்தை கூட்டுறவு ஸ்தாபனங்களிடம் ஒப்புவிக்க முடியும். பக்குவப்படுத்தப்பட்ட தோல், விஞ்ஞான ஆராய்ச்சி நிலைய கருவிகள் (Laboratory equipment), ரண சிகிச்சைக் கருவிகள், விவசாயக் கருவிகள், கைவேலைக் கருவிகள், பித்தளை சாமான்கள், மின்சார கருவிகள், பஞ்சாலைச் சாமான்கள், விளையாட்டு சாதனங்கள் ஆகிய பல பொருட்களை உற்பத்தி செய்யவும், பழுதுபார்க்கவும், பல நிலையங்கள் திறக்கப்படும். தனியார் தொகுதியில் பயன்படத் தேர்ச்சி பெற்ற தொழிலாளரை ஆயத்தம் செய்வதில் இந்த நிலையங்கள் முக்கிய கவனம் செலுத்தும். இந்த நிலையங்களில் உற்பத்தி நடப்பது, பயிற்சி பெறுவோர்க்கு உற்பத்தியின் வர்த்தக அம்சங்களில் பயிற்சி தருவதற்காகவே இருக்கும். நாளடைவில், இவற்றின் நிர்வாகம், இயந்திரத் தொழில் கூட்டுறவு சங்கங்களிடம் ஒப்புவிக்கப்படலாம். இந்த நிலையங்களை எந்த ஊரில் நிறுவுவது என்பதை முடிவு செய்யும்போது, மூலப் பொருட்கள் எங்கு வசதியாகக் கிடைக்கும் என்பதை அனுசரித்து முடிவு செய்யப்படும். ஆனால் கூடியவரை ராஜ்யத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் நியாயம் வழங்கும் முறையில் இந்த நிலையங்கள் வெவ்வேறு இடங்களில் நிறுவ முயற்சிக்கப்படும். இவ்வளவு பெரிய திட்டம் உடனடியாகச் சாத்தியமா என்ற சந்தேகம் எழும். ஆனால் நிலையங்களை நடத்தத் தேர்ச்சி பெற்ற நிபுணர்கள் கிடைக்கும்போதுதான் நிலையங்கள் திறக்கப்படும். இந்த ஆண்டில் நாம் நடத்த உத்தேசித்துள்ள திட்டங்கள் விரைவில் நிறைவேறும் என்றும், அதன் மூலம் இன்றைய நிலைமையில் மிகவும் தேவையான, தொழில் வளர்ச்சிக்குச் சாதகமான சூழ்நிலையை நம் ராஜ்யத்தில் உருவாக்க அவை உதவும் என்றும் நாம் எதிர் பார்க்கலாம்.

கடன் வசதி

"கடன்கள், முன்பணம்" இனத்தில் 8 கோடியே 61 லட்ச ரூபாய் செலவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இதிலிருந்து குடி நீர் சப்ளைக்காகவும் கழிவு நீர்ப் போக்குத் திட்டங்களுக்காகவும் ஸ்தல ஸ்தாபனங்களுக்கு ஒரு கோடியே 10 லட்ச ரூபாய் கடன் தரப்படும். சென்னை இயந்திரத் தொழில் மூலதனக் கார்ப்பரேஷன் நிதிகளைப் பலப்படுத்த 80 லட்ச ரூபாய் கடன் தரப்படும். தேசிய வளர்ச்சித் திட்ட, சமுதாய அபிவிருத்தித் திட்டப் பிரதேசங்களில் கடனாக ஒரு கோடியே 32 லட்ச ரூபாய் வழங்கப்படும். கைத்தறித் தீர்வை நிதியிலிருந்து நடத்த வேண்டிய திட்டங்களைப் பின்பற்றி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு 65 லட்ச ரூபாய் தரப்படும். முன்பு கடனாகவும் முன் பணமாகவும் தந்த தொகைகளில் 4 கோடியே 10 லட்ச ரூபாய் வரும் ஆண்டில் வசூல் செய்யப்படும். ஆக மொத்தம் இந்த இனத்தில் வரும் ஆண்டு நிகர செலவு 4 கோடியே 51 லட்ச ரூபாயாகும்.

கத்தியில்லை ! யுத்தமில்லை !

[ஸ்ரீ வி. தேவதாசன், ஆசிரியர், பனவடலிச் சத்திரம்]

(நெத்தியிலே நீல நிறப்பொட்டு—என்ற இசை)

கத்தியில்லை யுத்தமில்லை வாரும்—கிராம
சமுதாய நலத் திட்டம் பாரும்
மெத்தவும் வருந்துவோரே நீரும்—மிகப்
புத்தியுடன் கவனித்துக் கேளும்—(கத்தி
யில்லை)

சக்தியுள்ள வாலிபரே வாங்க—உங்கள்
ஓய்வு நேர வேலையிது தாங்க
பாதையைப் போட்டு வீதியைக்கூட்டி
சோதியாய் விளக்குகள் ஏற்ற—சேரியை
சொர்க்கத்திற் கொப்பாய் ஆக்க

கிடைத்தது வாய்ப்பு நமக்காக
கொடுப்பதோ பாதி உழைப்பாக
முடிந்திடும் தேவைமுழுதாக
முயன்றிடலாமே முன்னேற—நாம்
தயங்கிடலாமோ பயனடைய

கடன் பட்ட உழவா நீ—இனிமேல்
திடமுடன் வாழ்வதற்கே (இரண்டுமுறை)
தவணையாய்ச் செலுத்த தருகிறார் பணமே
கவலையை ஒழித்திடுவாயே—கிராம
சேவக்கை அடுத்திடுவாயே—(கத்தியில்லை)

ஹரிஜனத் தோழரே வாங்க—நாம்
அனைவரும் ஓர்குலம் தாங்க
தீண்டாதோ னென்றுமைத் தாண்டியே
சென்றால்
வேண்டிய தண்டனை பெறுவார்—உம்மை
வெறுத்துமே ஏசித்திரிந்தால்

முதியோர் கல்வி முன்னேற
முதலிடம் செய்வார் குறை தீர
கதரபிவிருத்தி நிறைவேற
கருவிகள் பெறும் விலை குறைவாக—நீர்
கருத்துடன் நூற்றிடும் முறையாக

கண்களுக் கொப்பான—நமது
பெண்களின் குறை நீக்க (இரண்டுமுறை)
பலவிதத் தொழிலில் பழக்க முண்டாக்கி
பதவிகள் பல பெற வேண்டி—அவர்க்கே
உதவுவார் மாதரைத் தூண்டி—(கத்தி
யில்லை)

கிராமாந்தர ஒலிபரப்பில் புதிய பரிசோதனைகள்

கிராமங்களில் அபிவிருத்தி நடவடிக்கைகள் சம்பந்த மான முயற்சிகளுக்கும், கிராமாந்திர ரேடியோ ஒலிபரப்பு நிகழ்ச்சிகளுக்குமிடையே ஒரு தொடர்பு இருக்கும்படி செய்வதற்காக அகில இந்திய ரேடியோ ஸ்தாபனம் பம்பாய் சர்க்கார், டாட்டா சமூக விஞ்ஞான நிலையம் ஆகிய வைகளின் கூட்டுறவுடன் ஒரு முன்னோட்டத் திட்டத்தை துவக்கியிருக்கிறது. சில குறிப்பிட்ட ஸ்தலங்களுக்கு விசேஷ கிராமாந்தர ஒலிபரப்புகள் நடத்தப்படும். அந்த ஸ்தலங்களில் விவசாயிகளின் விவாத—நடவடிக்கைத் தொகுதிகள் ஏற்படுத்தப்படும். விவாதத்தின் பலனும், நடவடிக்கைகளின் பலனும் விஞ்ஞான ரீதியில் பரிசீலனை செய்யப்பட்டு, எதிர்கால ஒலிபரப்புத் திட்டங்கள் அதற் கேற்றபடி அமைக்கப்படும்.

"யுனெஸ்கோ" ஸ்தாபனம் தருகிற 19,000 டாலர் மான்ய உதவியுடன் ஆரம்பிக்கப்படுகிற இந்த முன்னோட் டத் திட்டத்தில் 150 பரிசோதனை "விவசாய வானொலி மன்றங்கள்" (நபோ வாணி ஷேட்காரி மண்டல்) ஏற்படுத் தப்படும். இந்த மன்றங்களில் பொது ரேடியோ செட்டுகள் வைக்கப்படும். வாரந்தோறும் 45 நிமிஷ ஒலிபரப்பு நிகழ்ச்சி நடத்தப்படும்.

ஒவ்வொரு நிலையத்திலும் 20 தீவிர அங்கத்தினர் களுள்ள விவசாய மன்றங்களை ஏற்படுத்துவதற்காக பாதி நேர வேலைபார்க்கும் 30 கள ஊழியர்கள் சேவை செய் வார்கள். ஒவ்வொரு மன்றத்திலும் ஒரு அமைப்பாளரும் ஒரு தலைவரும் இருப்பார்கள். ஒலிபரப்பு ஆரம்பிப்பதற்கு முன் அமைப்பாளரிடம் நிகழ்ச்சிப்பட்டியல் ஒன்று கொடுக் கப்படும். அதில் ஒலிபரப்பு விவரங்களும், ஒலிபரப்பு விஷய சம்பந்தமான ஆதாரத் தகவல்களும், விவாதத்துக் கான குறிப்புகளும் இருக்கும். விவாதத்தை அதிக அக்கறை உள்ளதாக ஆக்கும்பொருட்டு ஒலிபரப்பு ஸ்தலத்தில் சினிமாக் காட்சிகள், சுவரொட்டி விளம்பரங் கள், படங்கள் முதலியவை வைக்கப்படும். ஒலிபரப்பில் கூறப்படுகிற அம்சங்கள் பற்றி மன்றம் விவாதிக்கும். ஒலிபரப்பில் தெரிவிக்கப்பட்ட விஷயங்களின் அடிப்படை யில் என்னவிதமான ஆக்கவேலைகளைச் செய்யலாம் என்பது பற்றியும் ஆலோசிக்கப்படும். விவாதத்தின் விவரங்கள் ஒலிபரப்பு ஏற்பாடு செய்கிறவர்களுக்கு அறிவிக் கப்படும். எனவே, விவசாயிகள், ரேடியோ ஸ்தாபனம் ஆகிய இரு தரப்புக்கும் இரு திசையிலும் தொடர்பு ஏற்படும்.

இத் திட்டம் சம்பந்தமான விஞ்ஞான ரீதியான பரிசீ லனையை டாட்டா சமூக விஞ்ஞான நிலையம் நடத்தும். மன்றத்திலுள்ள பல்வேறு அங்கத்தினர்களின் விஷய அறிவு, அபிப்பிராயங்கள், மனப்போக்கு முதலியவை மதிப்பீடு செய்யப்படும். ஒலிபரப்பின்போதும், ஒலிபரப் புக்குப் பின்னரும் மன்ற அங்கத்தினர்களின் நடவடிக்கை யையும் சில நிபுணர்கள் பரிசீலிப்பார்கள்.

ஆரம்பத்தில் இத் திட்டம் பம்பாய் ராஜ்யத்தில் குறிப்பிட்ட சில இடங்களுக்கு பிரயோகமாகும்.

கிராம ரேடியோ சங்கம்

....விவசாயம் பற்றி விவாதிக்கப் படுகிறது....

கிராம ரேடியோ சங்கம்

திருச்சிராப்பள்ளி வானொலி நிலையத்திலிருந்து கிராம மக்களுக்கென்று மாலைநேரத்தில், கிராம நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்பட்டு வருகின்றன. விவசாயம், கால்நடை விருத்தி, சுகாதாரம் மற்றும் பல விஷயங்கள் பற்றிய உரையாடல்களும், பேச்சுகளும், இந் நிகழ்ச்சிகளில் உண்டு. தவிர, 'கிராம ரேடியோ சங்கம்' வேறு உண்டு. இந்த நிகழ்ச்சி எதற்காக ஒலிபரப்பப்படுகிறது ? இச் 'சங்கத்தை' எப்படி அமைப்பது ? இதனால் பயன் ஏதேனுமுண்டா ?............இவை பற்றி, இக் கட்டுரையில் விவரிக்கப்பட்டிருக்கிறது.

—ஆசிரியர்]

வேப்பம்பட்டி கிராமத்தைப் பற்றித் தெரியுமா உங்களுக்கு ? தேசப்படத்தில், அப்படி ஒரு பெயரையே நீங்கள் காண முடியாது. நிலவரிக்கான கணக்குப் புத்தகங்களில் வேண்டுமானால், வேப்பம்பட்டி என்ற பெயர் கொஞ்சம் அடிபடும். மற்றப்படி, அந்தக் கிராமம் மூன்று இருப்பதே உலகத்துக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை.

வேப்பம்பட்டியில் பஞ்சாயத்து போர்டு இல்லை. தபால் ஆபீஸ் இல்லை, செல்லையா அண்ணாவியின் திண்ணையை விட்டால் வேறு பள்ளிக்கூடம் கிடையாது. அநேகமாக எல்லாமே கூரை வீடுகள்தான். ஓட்டுவில்லைக் கட்டடம் இரண்டே இரண்டு. நாட்டாண்மைக்காரர் வீடும் கிராமத்துப் பொதுச் சாவடியும். ஜனத் தொகை ஆண் பெண் குழந்தைகள் அடங்கலாக—முன்னூறு சொச்சம். அதில் இருநூறு சொச்சம் ரயில் பார்த்தறியாதவர்கள். கடிதம் வந்தால், படித்துத் தெரிந்துகொள்ளக்கூடியவர்கள் கிராமத்தில் ஐந்தே ஐந்துபேர் (உபாத்தியாயர் செல்லையா அண்ணாவியையும் சேர்த்து). கிராமத்தின் முக்கிய தொழில், விவசாயம்.

இவ்விதமாக நடுக்கடல் தீவுபோல் தன்னந்தனியாக நினைவுக்கு எட்டாத காலந் தொட்டு வாழ்க்கை நடத்தி வருகிற வேப்பம்பட்டிக்கு, வெளியுலகம் ஒரு வானொலிப் பெட்டியின் உருவத்தில் போய்ச் சேர்ந்தது. சர்க்கார் வாங்கி உதவிய அந்த பேட்டரி வானொலிப் பெட்டியை நாட்டாண்மைக்காரர் கிராமச் சாவடியில் திறந்து வைத்தார். வேப்பம்பட்டியின் வாழ்க்கைச் சரித்திரத்தில் அன்றைய தினம் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப் பெற வேண்டிய திருநாளாக அமைந்தது. கிராம மக்கள் எல்லாருக்கும் ஒரே அதிசயம், ஒரே கொண்டாட்டம். கிராமத்து ஜனத்தொகை பூராவும் கிராமச் சாவடி முற்றத்தில் கூடி வானொலி பெட்டி பேசிப் பாடுவதைக் காது கொடுத்துக் கேட்டார்கள். ஆம். நிஜமாகவே பேசத்தான் பேசுகிறது, பாடத்தான் பாடுகிறது. "அதுவும் நாம் பேசுகிற பேச்சிலேயே, வானொலிப் பெட்டியும் பேசுகிறதே" என்று எல்லாருக்கும் ஒரு திருப்தி.

"நாளைக்கும் இந்நேரம் வந்தால், ரேடியோவில் நிகழ்ச்சிகள் கேட்கலாம்" என்றார் நாட்டாண்மைக்காரர்.

நாலு நாள் தொடர்ந்தாற்போல், கூட்டம் கூடிற்று. பெட்டியிலிருந்து பேச்சும் பாட்டும் புறப்பட்டு வருகிற அதிசயத்தைக் கூட்டத்தில் எல்லாரும் ரசித்தார்கள்.

ஐந்தாவது நாள் மாலை வானொலியில் வழக்கம் போல், கிராம நிகழ்ச்சிகள் ஆரம்பமாயின. முகப்பாக ஒலிக்கும் தெம்மாங்கு மெட்டும்......அதன் மேல் தவழ்ந்த அறிவிப்புக்குரலும் ஊரெங்கும் கேட்டது.

ஆனால் அதை யாரும் கவனிப்பாரில்லை. கிராமத்துச் சாவடி முற்றம் வெறிச்சோடிக்கிடந்தது. ஒன்றிரண்டு கோழிகள் மட்டும் மணலைக்கிளறிக்கொண்டிருந்தன.

பெட்டியை மூடிவிடுவோமா என்று நாட்டாண்மைக்காரர் அங்குமிங்கும் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது, உபாத்தியாயர் செல்லையா அண்ணாவி வந்து சாவடி முற்றத்தில் மணலில் துண்டை விரித்து உட்கார்ந்தார்.

ரேடியோ நிகழ்ச்சி ஆரம்பமாயிற்று.

"வாங்க, வாங்க, ஒங்களைத்தான் எதிர் பார்த்துக் கிட்டிருந்தோம். வணக்கமுங்க"

"வணக்கம், வணக்கம்"

"சரி, ஒங்க பக்கத்திலே மரவள்ளிக் கிழங்கு சாகுபடி அதிகம்னு தெரியுது. அதைப்பத்திக் கொஞ்சம் எடுத்துச் சொல்லுங்களேன் ; கேட்கலாம்"

"நல்லாச் சொல்றேன்"

இதைக் கேட்டுக் கொண்டிருந்த செல்லையா அண்ணாவி சிரித்தார்.

"என்ன சிரிக்கிறீங்க, வாத்தியாரே" என்றார் நாட்டாண்மைக்காரர்.

"சிரிப்பு வராம என்ன செய்யும் ? நாம்ப இந்த கிராமத்திலே சோழ ராஜா பாண்டிய ராஜா காலத்திலேருந்து மரவள்ளிக்கிழங்கு விவசாயம் செய்துக்கிட்டு வாரோம். நமக்குப் போயி இங்கிலீஸ் படிப்பு படிச்சுட்டாங்கன்னு இவுங்க மரவள்ளிக் கிழங்கைப்பத்திக் கத்துக் குடுக்கப் போகிறுங்களாங் காட்டியும் !"

நாட்டாண்மைக்காரருக்கு வாத்தியார் செல்லையா அண்ணாவியின் கருத்தில் உண்மை இருப்பதாகவே

தோன்றிற்று. ஆனாலும் 'ஒங்க பக்கத்துலே' என்று சொன்னார்களே—ஒரு வேளை அவரும் நம்மைப் போன்ற விவசாயியாக இருந்தால்? என்ற சந்தேகம்.

ரேடியோ நிகழ்ச்சியில் என்ன தான் சொல்லப் போகிறார்கள் என்று இருவரும் கவனிக்க ஆரம்பித் தார்கள்.

* * * * *

நிலத்தை உழுகிற மரக் கலப்பையை முதன் முதலில் கண்டுபிடித்த இந்திய விஞ்ஞானி யார் என்று நமக்குத் தெரியாது. அதே கலப்பை இன்றும் நம் நாட்டு விவசாயத்தில் இடம் பெற்றுச் சிரஞ்சீவியாய் விளங்குகிறது. பொதுப்படையாகப் பார்க்கும் பொழுது, இரண்டாயிரம் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் எப்படிவிவசாயம் நடைபெற்றதோ அதே முறையில்தான் இன்றும் நம் நாட்டில் நடைபெற்று வருகிறது என்று சொல்லலாம். இந்திய விவசாயிக்குத் தன் பிதுரார்ஜித சொத்தாகிய பரம்பரை அநுபவத்தில் இருக்கும் நம்பிக்கை அளவிட முடியாதது. முன்னோர்களின் வழக்கத்தில் ஒரு சிறு மாறுதல் செய்கிறதென்றால், அது ஏதோ மன்னிக்க முடியாத குற்றமாகக் கருதப்பட்டது. இந்நிலை காரணமாக, இந்தியா, விவசாயத்துறையில் எவ்வளவோ பின்தங்கி நிற்க நேர்ந்தது. உணவு தானிய இறக்குமதிக்கென்று, கோடிக் கணக்கான பணத்தைச் செலவு செய்யும்படி ஆயிற்று.

இது நிற்க, பாரத நாடு தன் பற்றுக்குறையை போக்கி சுயதேவைப் பூர்த்தி செய்துகொள்ள வேண்டி, அரசினர் தீவிர முயற்சி எடுத்து, பல திட்டங்களை வகுத்து, உணவு உற்பத்தியை எதிர்பார்த்த அளவிற்கு மேல் அதிகரிக்கச்செய்து வெற்றிகண்டுள்ளதை எல்லோரும் அறிவோம். வெகு சமீப காலம் வரை உணவு தானியங்கள் இறக்குமதி செய்வதில் பல கோடி ரூபாய்களை அந்நிய நாடுகளுக்கு வாரிக் கொடுத்து வந்த இந்தியா இன்று வெளி நாடுகளுக்கு உணவு தானியம் ஏற்றுமதி செய்யும் நிலைக்கு வந்திருக்கிறது. நம் மத்திய அரசாங்க விவசாய அமைச்சர் அவர்கள் கூறியதைப் போன்று, இம்மகத்தான காரியம் ஒரு நொடியில் ஓர் மந்திரத்தால் ஏற்பட்டு விட்டதன்று. அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்கி நம் மக்கள், குறிப்பாக விவசாயிகள், அரும்பாடு பட்டதின் பயனே இவ் வெற்றியாகும்.

சுதந்திரம் என்றால் அது வெறும் அரசியல் சுதந்திர மட்டுமன்று. மக்கள் பசி தீர்ந்து நோயற்று இன்ப வாழ்வு பெற்றவர்களாய் வாழ்தல் வேண்டும். உண்ணும் உணவிற்கும் உடுக்கும் உடைக்கும் அந்நிய நாட்டாரை எதிர் பார்த்து வாழும் ஓர் சமூகத்தை விடுதலையுற்ற சமூகமாக எங்ஙனம் தான் கருத முடியும்?

இதை உத்தேசித்தே, அரசினர் உணவு விஷயத்தில் பூரண நிறைவு ஏற்பட வேண்டுமென்று தீர்மானம் செய்தார்கள். ஐந்தாண்டுத் திட்டத்திலும் அதைத்தொடர்ந்து வரும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் விவசாய முன்னேற்றத்திற்கு முதல் ஸ்தானம் கொடுத்து மிகவும் கண்ணும் கருத்துமாகக் கவனித்து வருகிறார்கள்.

கோடி கோடியாய் செலவிட்டு பல பிரும்மாண்டமான அணைத்திட்டங்களை வகுத்து அவற்றை கட்டி முடித்துள்ளதும், சிந்திரி போன்ற ரஸாயன உர உற்பத்தி சாலைகளைத் தோற்றுவித்திருப்பதுவும் இதன் பொருட்டு அல்லவா? பெரும் அணைகளைக் கட்டி முடிப்பதால் லக்ஷக் கணக்கான ஏக்ரா நிலங்கள் பாசனத்திற்குக் கொண்டுவரப்படுகின்றன. இதனால் விவசாயம் பரவுகிறது. உணவு உற்பத்தி பெருக்க மடைகின்றது. உணவு உற்பத்தி பெருகுவதினால் நம் மக்களின் பொருளாதார நிலை உயர்கிறது. படிப்படியாக நம் சுபீட்சமும் உயருகிறது. இவை நீண்ட கால திட்டமெனப்படும்.

இது ஒரு புறமிருக்க, பொதுவாக நம் விவசாயம் வளரவும், உணவு உற்பத்தி பெருகவும் அரசினர் பல குறுகிய கால திட்டங்களை வகுத்து உழவர் சமூகத்திற்கு பலவகையிலும் உதவி வருகின்றனர். தக்காவிக் கடன்கள் கொடுக்கப்படுகின்றன. பொறுக்கு விதைகள் விவசாயப் பண்ணைகளில் கண்டுபிடிக்கப்பட்டு, மக்களுக்கு வழங்கப்படுகின்றன. உரங்கள் தட்டின்றிக் கிடைக்க, வழி வகைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. உழவுக்கான ஏர், டிராக்டர் போன்ற கருவிகள் கடனாகவும் குறைந்த வாடகைக்கும் கொடுத்துதவப்படுகின்றன. பாசன வசதிக்குத் தண்ணீர்த் தட்டுப்பாடான பிராந்தியங்களில் கிணறுகள் வெட்டி பம்பு செட்டுகள் மூலம் நீர் இறைக்க ஏற்பாடுகள் செய்து தரப் படுகின்றன. இன்னும் விவசாயத்திற்கு இன்றியமையாத கால்நடைகள் க்ஷேமாபிவிருத்தியிலும் அதிக கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது.



....சார்வாய் புதூரிலிருந்து சார்வாய் கிராமத்துக்கு, மக்கள் ஒத்துழைப்புடன் ரஸ்தா அமைக்கப்படுகிறது......சேலம் ஜில்லா கலெக்டர் ஸ்ரீ ஆர். பால சுப்ரமணியம் 4-1-56-ல் அந்த ரஸ்தாவைப் பார்வையிட்டார்....

இவற்றுக்கெல்லாம் மேலாக நூதன முறையில் சாகுபடி காரியங்களைப் போதிப்பதிலும் நம் அரசினர் பின்னடைய வில்லை. இப்பொழுது எங்கு பார்த்தாலும் புகழ்ந்து கொண்டாடப்படும் ஜப்பானிய நெல் சாகுபடி முறையை இந்நாட்டில் யாவரும் கையாளும்படி செய்வதற்கு அரசினர் பாடுபட்டது கொஞ்ச நஞ்சம் அல்லவே.

பொதுவாக, விவசாயத் துறையில் புரட்சிகரமான மாறுதல்களைச் செய்து அதைப் புதிய விஞ்ஞான அடிப்படையில் சீர்திருத்தி அமைக்க வேண்டுமென்று இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஒரு விழிப்பு ஏற்பட்டது. உழவு, விதைப்பு, நடவு, உரம், அறுவடை, பாசன வசதி, பயிர்களைத் தாக்கும் நோய்களுக்கு மருந்து இவை எல்லாவற்றையும்பற்றிப் புதிய யோசனைகளை அரசாங்க விவசாய இலாகாவைச் சேர்ந்த விவசாயத் துறை நிபுணர்கள் வெளியிட்டார்கள். புதிய யோசனைகள், நம் விவசாயிகளுக்குப்புதிராய் இருந்தன. ஒருபுறம், முன்னோர் வகுத்தவழியை மாற்றலாமா என்ற சந்தேகம், மற்றொரு புறம், விளைச்சலைப் பெருக்கினால் நல்லதே என்ற ஆர்வம் காலங் கண்ட பழைமையை நம்புவதா, விஞ்ஞானப் புதுமைக்குச் செவி சாய்ப்பதா என்று விவசாயிகள் வழி தெரியாமல் திகைத்தார்கள்.

இந்த நிலையில் 1939-ம் ஆண்டில், நாடெங்கும் வானொலி நிலையங்கள் இயங்க ஆரம்பித்தன. கிராமங்களுக்கென்று தனிப்பட நிகழ்ச்சி ஒலி பரப்பாயிற்று. இந்நிகழ்ச்சிகளின் நோக்கம், விவசாயத்துறையில் உள்ள முன்னேற்றக் கருத்துக்களை கிராம மக்களுக்கு எடுத்துச் சொல்வதுதான். இந்த நோக்கம் நிறைவேறுவதற்குப் பல தடைகள் குறுக்கே நின்றன. அவற்றுள் முக்கியமான தடங்கல் என்னவென்றால், விவசாயிகளுக்கு புதிய கொள்கைகளில் இருந்த அவநம்பிக்கைதான். இந்த அவநம்பிக்கையை மனத்தத்துவ ரீதியாகப் போக்கினாலொழிய, விவசாயத் துறையில் முன்னேற்றம் காணமுடியாது என்பது சில ஆண்டுகளிலேயே தெளிவாயிற்று. இதற்கிடையில், 1942–52 ஆகிய பத்தாண்டு காலத்தில் நாட்டில் உணவுப்

—×—

பொய்க்கால் புரவி ஆட்டம்

....ரேடியோ விசேஷ
நிகழ்ச்சிகளில்
இதுவுமொன்று....

—×—

பற்றாக்குறைப் பிரச்னை மிக மிகக் கடுமையாக நிலவியது. நிலங்களின் விளைச்சலைப் பெருக்கியாக வேண்டும், என்ற நிர்ப்பந்தம் உண்டாகவே, விவசாய இலாகாக்கள் தீவிரமாகப் பிரசாரம் செய்ய ஆரம்பித்தன. மத்திய சர்க்காரின் நிதி உதவியைக் கொண்டு, புத்தகங்களும் துண்டுப் பிரசுரங்களும் வெளிவந்தன. பொறுக்கு விதைகள், புது முறை விவசாயக் கருவிகள், மின்சார சக்தி கொண்டு நீர் இறைக்கும் இயந்திரங்கள், ரஸாயன உரங்கள் இவை, தவணைக்கடன் முறையில் விவசாயிகளுக்கு விற்கப்பட்டன. எல்லாவற்றுக்கும் மேலாக, வானொலி நிகழ்ச்சிகளில் கிராம ரேடியோ சங்கம் என்ற நிகழ்ச்சியை வாரம் இரு முறை ஒலிபரப்புவதென்று தீர்மானமாயிற்று.

தமிழ் நாட்டில் அமைந்துள்ள திருச்சி வானொலி நிலையத்திலிருந்து கிராம மக்களுக்கென்று தினந்தோறும் மாலை $6\frac{1}{2}$ மணியிலிருந்து $7\frac{1}{4}$ மணி வரை கிராம நிகழ்ச்சிகள் என்று ஏற்படுத்தி நடத்தி வருவதை யாவரும் அறிவார்கள். இந்நிகழ்ச்சியில் விவசாயம், கால்நடை, சுகாதாரம், ஆகிய விஷயங்கள் பற்றிய உரையாடல்களும் பேச்சுகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. மேலும், கிராம நலம் சமூக நலம் பற்றிய அடிப்படையிலான பல ஹாஸ்ய சித்திரங்களும் நாடகங்களும் ஒலிபரப்பப்படுகின்றன. இவை தவிர, கிராம ரேடியோ சங்கம் என்ற பெயரில் வாரத்திற்கு இரு முறை செவ்வாய், வியாழன் ஆகிய நாட்களில், அநுபவ சாலிகளான விவசாயிகளைக் கொண்டு அவர்கள் அநுபவங்களை எடுத்துச் சொல்லுமாறு 49 செப்டம்பர் முதல் நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டன.

சர்வகலாசாலைகளில் படித்துப் பட்டம் பெற்ற விவசாய நிபுணர்களையும் அவர்கள் எழுதிய புத்தகங்களையும் வேப்பம்பட்டி செல்லையா அண்ணாவியைப் போன்ற விவசாயிகள் ஒரு வேளை நம்பாமற்போனாலும் போகலாம். ஆனால் தம்மைப்போன்ற இதர விவசாயிகள் நேரில் வந்து சொந்த அநுபவங்களை எடுத்துச் சொன்னால் அதில் விவசாயிகளுக்கு நம்பிக்கை உண்டாகலாமல்லவா? செல்லையா அண்ணாவியும் இன்னொரு விவசாயி சொல்லும் அநுபவங்களைக் கேட்டு அதனால் பலனடைவது நிச்சய மல்லவா? எனவே, புதிய விவசாய முறைகளைக் கையாண்டு வெற்றி பெற்று, புதிய கொள்கைகளில் நம்பிக்கை உள்ள விவசாயிகளை 'கிராம ரேடியோ சங்க' நிகழ்ச்சிகளில் பேசுமாறு அழைத்தோம்.

இவர்கள் தமிழ் நாட்டின் பல பாகங்களிலிருந்து வந்து கலந்து கொள்கிறார்கள். ஆங்காங்கே கிராம ரேடியோ சங்கங்கள் அமைக்கப்படுகின்றன. ஒவ்வொரு சங்கத்திலும் ஒரு தலைவரும், குறைந்த பக்ஷம் ஐந்து அங்கத்தினர்களும் இருக்கிறார்கள். அவர்கள் திருச்சி நிலைய கிராம ரேடியோ சங்க விவாதங்களைக் கேட்டு வருகிறார்கள். அவ்வப்போது அவர்கள் தாங்கள் கேட்ட நிகழ்ச்சிகள் பற்றி தங்கள் கூட்டு அபிப்பிராயங்களை நிலையத்திற்கு எழுதி வருகிறார்கள். இதுபோன்ற எல்லா ரேடியோ சங்கங்களும் தங்கள் அபிப்பிராயங்களை நிலையத்திற்குத் தவறாமல் எழுதி வர கடமைப்பட்டிருக்கிறார்கள் என்று நாம் சொல்ல வேண்டியதில்லை. இவ்வாறு எழுதி அனுப்பப்படும் கிராம ரேடியோ சங்க அங்கத்தினர்களது அபிப்பிராயம், அடுத்துக் கூடும் நிலைய கிராம ரேடியோ சங்கத்தில் வாசிக்கப்பட்டு விவாதிக்கப்படுகிறது. 1955 டிஸம்பர் 31-ம் தேதி முடிய 197 கிராம ரேடியோ சங்கங்கள் நம் தமிழ் ஜில்லாக்களில் அமைக்கப்பட்டிருக்கின்றன.

கிராம ரேடியோ சங்கங்களின் எண்ணிக்கை விபரங்களை ஜில்லா வாரியாக கீழே தருகிறோம்.

திருச்சி	53
தஞ்சாவூர்	51
கோவை	23
மதுரை	16
தென்னாற்காடு	31
வட ஆற்காடு	1
சேலம்	8
ராமநாதபுரம்	9
திருநெல்வேலி	5
	197

இந்த சங்கங்கள் மூலமாக விவசாயிகள் தங்கள் கருத்துகளைப் பிறருக்கு எடுத்துச் சொல்லவும், பிறர் அனுபவங்களைத் தெரிந்து கொள்ளவும் பரஸ்பரம் ஓர் அரிய சந்தர்ப்பம் ஏற்பட வழி வகுக்கப்பட்டுள்ளது. இது போன்று இன்னும் பல கிராம ரேடியோ சங்கங்கள் தமிழ் நாட்டில் பல பாகங்களிலும் நிறுவப்பட்டு விவசாயப் பெரு மக்கள் அதன் மூலம் ஒன்று சேர வேண்டுமென்பதே எம் நோக்கமும் பேராவலுமாகும்.

இம்மாதிரியான கிராம ரேடியோ சங்கம் அமைப்பது மிகவும் சுலபமான ஒரு காரியம் என்பதை நாம் மீண்டும் சொல்ல வேண்டுவதில்லை. எந்த கிராமத்தில் ரேடியோ பெட்டி இருக்கிறதோ அங்கெல்லாம் சங்கம் நிறுவலாம். ஐந்து பேருக்குக் குறையாமல் அங்கத்தினரைக் கொண்டிருக்க வேண்டும். தினந்தோறும் திருச்சி கிராம நிகழ்ச்சிகளை, குறிப்பாக, செவ்வாய், வியாழக்கிழமைகளில் நடைபெறும் கிராம ரேடியோ சங்க நிகழ்ச்சிகளை தவறாமல் கேட்பதற்கான ஆர்வம் மட்டும் இருக்க வேண்டும். நிலையம் அவர்களிடம் எதிர் பார்ப்பது இவ்வளவு தான். தங்கள்மேலான விருப்பத்தை எங்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும். மேற்கொண்டு நடக்க வேண்டியவற்றிற்கு நாங்கள் குறிப்பு எழுதி ஏற்பாடு செய்கிறோம். ஒரு ஊரில் கிராம ரேடியோ சங்கம் நிறுவினால் அதன் பின் கடிதப் போக்குவரத்துக்காக ஏற்படும் தபால் செலவு நிலையத்தை சார்ந்தது என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம். ஆகவே, ஒவ்வொரு கிராமத்தோடும் தொடர்பு கொள்ள ஆசைப்படும் திருச்சி ரேடியோ நிலையத்திற்கு கிராம மக்கள் ஓர் அரிய சந்தர்ப்பத்தை அளிப்பார்களா?

தேசிய வளர்ச்சித் திட்டம்

[ஸ்ரீ எஸ். பால்ராஜ்]

(" கலைமுதலாக தொழில் முறை " என்ற இசை)

வாழ்க்கை வசதிகள் அனைத்தும் அளிப்பது
தேசிய வளர்ச்சித் திட்டம்
ஜாதியினிமித்தம் ஊரில்
தோன்றிய பூசல்களனைத்தும்
கோதி எறிந்திட வேண்டும்—என்ற
ஒற்றுமை உணர்ச்சியை ஊட்டிய திட்டம்
(வாழ்)

வாழப்பிறந்திட்ட மக்கள்
கெட்ட சாக்கடை தண்ணீரினலே
சூழப்படுதல் கூடாது—என்று
சாக்கடைக் கால்வாயை கட்டிடும் திட்டம்
(வாழ்)

மேடுபள்ளங்கள் நிறைந்த
கெட்ட நடைபாதை கூடாது என்று
பாடுடன் ரஸ்தா அமைத்து—அதில்
சவாரி போங்களென்று ஜலோ கொடுக்கும்
திட்டம் (வாழ்)

வைத்திய சாலைக்கும் உதவி
இளம் பாலர்கள் பள்ளிக்கும் உதவி
கைத்தடி பிடித்து நடக்கும்—பெரும்
முதியவர் பள்ளிக்கும் உதவி அளிக்கும் திட்டம்
(வாழ்)

உணவளிக்கும் விவசாயம்
மிக உயரிய முறையில் வளர
சுணக்காமல் பொறுக்கு விதைகள்—நல்ல
உப்பு உரமும் கடனும் அளிக்கும் திட்டம்
(வாழ்)

சிறுவர் விளையாடப் பூங்கா
பெண் நலம் பேணமாதர் சங்கம்
நறு மணம் கமழும் பாலை—தந்து
பேபி ஷோக்களை பேஷாய் நடத்தும் திட்டம்
(வாழ்)

சோஷலிச சமுதாயம்
உருவாகிட அடிப்படையாக,
நேசமுடனே மக்கள் வாழ—நல்ல
கூட்டுறவு சங்கத்தை நாட்டிச் சீராட்டும்
திட்டம் (வாழ்)

அலைகடல் அளிக்கும் மீன் குஞ்சும்
புகழ் கர்நூலின் மாம்பழக் கன்றும்
விலை மதியாப் பொலிகாளை—எல்லாம்
மலிவாக அளித்திடும் பொலிவான திட்டம்
(வாழ்)

தருக்களை நட்டிப் பேணியும்
சமூகக் கல்விச் சாலை அமைத்தும்
சிறு கதிர் மணிகளை அளித்தும்—புதிய
கஸ் டோடியன்களை உருவாக்கும் திட்டம்
(வாழ்)

ஏட்டிலடங்கா உதவிகள்
எண்ணமுடியாத நன்மைகள்
நாட்டு மக்களுக்கு ஈந்து—மிக
நலமுடன் வாழ்ந்திட பலனளிக்கும் திட்டம்
(வாழ்)

நாடு நலம் பெற உழைப்போம்,
மிக நல்லதொரு சமுதாயம் அமைப்போம்
பீடு நடை போடுவோம் வாரீர்—பாரத
தேசத்தின் பேர் பெற்ற மக்களே (வாழ்)

குறவன்-குறவஞ்சி

..குறவன்-குறவஞ்சி பாடல்கள், கிராம நிகழ்ச்சிகளில் திருச்சிராப்பள்ளி ரேடியோ மூலம் ஒலிப்பரப்பப்படுகின்றன..

(பிப்ரவரி மாத தொடர்ச்சி)

காட்சி 2

இடம்—காட்டுப்பட்டியில் ஓர் சாலை.

காலம்—பகல் நேரம்.

நடிகர்கள்—சோமு, ராமு.

(ராமு, சோமு இருவரும் சாலையில் நடந்து வருகிறார்கள்).

சோமு—ராமு ! சச்சுதானந்தம் பிள்ளை எச்சல் கையாலேக் கூட காக்கா ஓட்ட மாட்டாறே அவரு நிலங்கொடுக்கப் போராறு.

ராமு—ஆபீஸர்களென்னு சொன்னு அவருக்குக் கொஞ்சம் தொடை நடுங்கும். ஆகையாலேத்தான் ஜூனியர் இஞ்சினியரையே போகச் சொன்னேன். அது போயிட்டுப் போவுது. இந்த ஜூனியர் இஞ்சினியர் எவ் வளவு சகஜமா பேசுகிறார் பார்த்தியா ?

சோமு—முன்பு ஆங்கில ஆட்சி இருக்கும்போது ஆபீஸர்களை நம்மைப் போலுள்ளவர்கள் பார்ப்பதென்றால் (very very difficult) அப்படிப் பார்த்தாலும் நல்லாகூட பேச மாட்டார்களாம்.

ராமு—சும்மா சொல்லக்கூடாது. சர்க்காருடைய மன மெல்லாம் இப்போ எவ்வளவோ மாறிப் போயிருக்கிறது. பொது மக்களுக்குப் பணிபுரிய வேண்டும், நன்மை செய்ய வேண்டும் என்கிற எண்ணம் கொண்டுள்ளார்கள் அவர்கள்.

சோமு—அரசாங்கத்திற்காக மக்கள் அல்ல, மக்களுக்காகத் தான் அரசாங்கம் என்கிற ஜனநாயக உண்மையை ஆபிஸர்கள் இப்போது நன்கு தெரிந்துகொண்டு விட்டார்கள்.

ராமு—எப்படியாவது “ புதிய பாதை ” அமைக்கப்பட்டால் சரிதான்.

சோமு—சரி. சரி. நேரமாகி விட்டது. சீக்கிரமா நட.

திரை விழுகிறது.

காட்சி 3

இடம்—நல்லிடைக் குறிச்சி கிராமத்தில் சச்சுதானந்தம் பிள்ளையின் வீடு.

நேரம்—காலை நேரம்.

நடிகர்கள்—சச்சுதானந்தம் பிள்ளை, ஹேமா, சன்யாசி.

சச்சுதானந்தம் பிள்ளை நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு அன்றைய செய்தித்தாளைப் பார்த்துக்கொண் டிருக்கிறார். கையில் ஓர் கடிதத்தை எடுத்துக்கொண்டு ஹேமா வருகிறாள். சற்று நிற்கிறாள். சச்சுதானந்தம் பிள்ளை பத்திரிகையிலே ஆழ்ந்திருக்கிறார்.

ஹேமா—அப்பா ! பத்திரிகையிலே ஆழ்ந்து விட்டீர்களே !

சச்சு—ஹேமாவா ! வாம்மா ! இன்றைய தபாலிலே ஏதாவது விசேஷமுண்டாம்மா ?

ஹேமா—General Hospital Surgeon-General லிடமிருந்து ஒரு கடிதம் வந்திருக்கிறது. அதைத் தவிர வேறொன்று மில்லை.

சச்சு—ஏதாவது விசேஷமுண்டா ?

ஹேமா—General Hospital லிலேயே உத்யோகம் இருக் காம். அவ் வுத்தியோகத்தை ஏற்றுக்கொள்ள சம்மத மான்னு கேட்டிருக்காங்க.

சச்சு—(முகமலர) ஆகா ! இப்போதுதான் என் மனம் மகிழ்ச்சி அடைகின்றது. இந்த சச்சுதானந்தம் பிள்ளை பிளான் போட்டா போட்டதுதான்.

ஹேமா—அப்படி என்னப்பா பிளான் போட்டிருந்தீங்க ?

சச்சு—டாக்டர் படிப்பிலே ராஜ்யத்திலே முதன்மையாகத் தேறிய உனக்கு திடீர்னு பெரிய உத்யோகம் கிடைத்து டும்னு பிளான் போடாமே வேறென்ன பிளான் போட் டிருப்பேன்.

G.N.—4

ஹேமா—(வருத்தம் தோய்ந்த முகத்தோடு) அப்படி யென்றால் உடனே சம்மதம் தெரிவிக்கச் சொல்றீங்களா!

சச்சு—இதற்குத் தயக்கம் என்? (கலவரத்தோடு)

ஹேமா—அந்த வேலைக்கு நான் அவசியம் போகத்தான் வேணுமாப்பா?

சச்சு—(இளகிய உள்ளத்தோடு) எம்மா! ஹேமா! பின்னே எதுக்கம்மா M.B.B.S. படிச்சே!

ஹேமா—படிப்பதெல்லாம் பெரிய பெரிய உத்யோகம் பார்க்கத்தானுப்பா?

சச்சு—நீ இப்போ என்ன சொல்றே?

ஹேமா—அப்பா! அரசாங்க உத்யோகந்தான் உத்யோகமா? கைகட்டி சேவகம் செய்வதைத்தான் நீங்கள் விரும்புகிறீர்களா? உங்கள் மகள் ஹேமா அடிமையாய் வாழ்வதைக் காணத்தான் ஆசை படுகிறீர்களா? அரைக் காசு உத்யோகமென்றாலும் அரண்மனை உத்யோகம் என்று பெருமை பாராட்டிய காலம் என்றோ போய்விட்டதப்பா. ஆயிரமிருந்தாலும் அரண்மனை உத்யோகந்தானே என இழிவாகச் சொல்கின்ற காலமப்பா இது!

சச்சு—ஹேமா! நீயோ சிறுசு. அன்னையையிழந்த உன் மனம் புண்படக்கூடாது என்பதற்காக நான் இது வரையில் உன் மனப் போக்கின்படியே நடந்து வந்தேன். இனியும் அவ்விதம் நடக்கத்தான் ஆசைப்படுகிறேன். பொறுப்பை யுணர்ந்து நீயும் நன்கு நடந்துகொள்ள வேண்டும். ஏட்டுக் கல்வியோடுகூட வீட்டுக் கல்வியும் வேண்டும். நூல் அறிவோடுகூட நுண்ணறிவும் வேண்டும்.

ஹேமா—இவைகள் வேண்டாமென்பது யாரப்பா மறுத்தார்கள்?

சச்சு—எதற்கும் முதலில் நன்கு ஆலோசிக்க வேண்டும். பிறகுதான் காரியத்தை தொடங்க வேண்டும். அப்படிச் சில்லாமல் காரியம் ஒன்றை ஆரம்பித்துவிட்டு பிறகு அதைப்பற்றி ஆலோசிப்பதென்பது ஆபத்தானது—அறிவுடையவர்களுடைய செய்கையுமாகாது. அப்பா ஏதோ தடுக்கிறாரே என்று ஆத்திரப்படாதே. எல்லாவற்றையும் நன்கு சிந்தித்துப்பார். பிறகு சொல், உன் முடிவை.

ஹேமா—நன்கு யோசித்தபிறகு தானப்பா........ உங்களிடம் விஷயத்தை வெளியிடுகிறேன்.

சச்சு—அம்மா ! நீ அதிகாரத்திலே இருந்தால் அப்போது உன் குரலுக்கு இருக்கும் மகத்துவம், பெருமை, சக்தி எல்லா வற்றையும் சிறிது எண்ணிப்பார். உனக்குக் கீழ் எத்தனை சிறிய டாக்டர்கள், எத்தனை நர்சுகள் எத்தனை பணியாட்கள் . . . .

ஹேமா—அப்பா ! நான் ஆட்சி பீடத்தில் அமர வேண்டும், அதிகாரக் குரல் எழுப்பவேண்டும், நீங்கள் அதைப் பார்க்கவேண்டும்.

சச்சு—ஆமம்மா ! நான் அதைப் பார்க்க வேண்டும். பரவச மடையவேண்டும்.

ஹேமா—நீங்கள் கனவு காண்கின்ற அதிகாரக்குரல் ஆங்கிலேயரோடு அன்றே ஆயிரத்து தொள்ளாயிரத்து நாற்பத்தேழு ஆகஸ்டிலே கப்பலேறி போய் விட்டதப்பா. அதிகாரக்குரல், ஆணவங் கொண்டவள் என்று மானம் போகும்படியாக ஏசத்தான் செய்யும். அது இந்திய மண்ணில் செல்லாது. பூத்துவரும் பாரதம் அதிகாரக் குரலுக்கு அடிபணிந்து அடங்கிவிடாது.

சச்சு—ஏதேதோ சொல்கிறுயே, உன்னுடைய முடிவுதான் என்னம்மா ?

ஹேமா—ஆணவத்தைத் தோணச் செய்யும் அதிகாரக் குரல் எழுப்ப ஆசைப்படவில்லை நான். அயலாரிடம் அடிமையாய் கைகட்டி வேலை செய்ய விரும்பவில்லை.

சச்சு—அப்படி யென்றால் ? (சற்று கடுமையாக).

ஹேமா—என்பையும் உருக்கும் பண்பு மிகுந்த அன்புக் குரல் எழுப்ப ஆசைப்படுகிறேன். சொந்தமாக நர்ஸிங் ஹோம் ஆரம்பித்து நடத்த ஆசைப்படுகிறேன்.

சச்சு—உ..ம் . . . . . . அதுவுஞ்சரிதான் ! ஆமாம் எந்த ஊரிலே நர்ஸிங் ஹோம் ஆரம்பிப்பது ?

ஹேமா—என்னப்பா இப்படி கேட்கிறீர்கள் ! நம்முடைய சொந்த ஊராகிய இந்த நல்லிடைக்குறிச்சியிலே தான் ஆரம்பிக்கவேண்டும்.

சச்சு—என்னது ? இந்த நல்லிடைக்குறிச்சியிலா ?

ஹேமா—இந்த நல்லிடைக்குறிச்சிக்கு என்னவாம் ?

சச்சு—நல்லிடைக்குறிச்சிக்கு ஒண்ணுமில்லே. எல்லாம் உனக்குத்தான். எம்மா ? இந்த ஊரிலே ஒண்ணரைக் காசு வருமா ? வருகிறவன் அத்தனை பேரும் ஓசியிலேயே மருந்து சாப்பிட்டு போயிடுவான்களே ! நல்லாதேர்ந்தெடுத்தே போ ! பிச்சைக்காரப்பய ஊருலேயிது ! பிச்சைக்காரப்பய ஊரு ! (ஹேமா சிரிக்கிருள்).

சச்சு—என்னம்மா சிறிக்கிறே ?

ஹேமா—நல்லிடைக்குறிச்சி பிச்சைக்காரப்பய ஊராகப் போனதற்கு காரணம் என்னுன்னு யோசனை செய்தேன் . . . .

சச்சு—உடனே சிரிப்பு வந்து விட்டதாக்கும் ?

ஹேமா—ஏனப்பா நல்லிடைக்குறிச்சியா பிச்சைக்காரத் தனமாக போய் விட்டது. அதில் உள்ள மக்கள் தானே மோசமாக நடந்து கொள்கிருர்கள்.

சச்சு—ஆமாம். இங்குள்ள அத்தனை பேரும் பிச்சைக்காரப் பயல்கள்தான். அதில் சந்தேகமென்ன ?

ஹேமா—அப்பப்பா நீங்களும் இவ்வூர் வாசிதானே நானும் . . . .

சச்சு.—என்னது ? ஹேமா ! இதுவரையில் யாருமே என்னை இப்படிக் கேட்டதில்லை. மகளாச்சே என்று அமைதி அடைய வேண்டியிருக்கிறது. சரி. வீண் வார்த்தை வேண்டாம். இந்த ஊரிலே வரும்படி வராது. ஆகையால் இங்கே நர்ஸிங்ஹோம் வைக்கக்கூடாது. வேண்டுமானுல் வேறு நல்லா வரும்படி வரக்கூடிய ஊரில் வைத்துக் கொள்ளலாம். நான் பிளான் போட்டா போட்டதுதான்.

ஹேமா.—கொஞ்ச நஞ்சம் படித்தவர்களெல்லாம் சொந்த கிராமத்தை விட்டு விட்டு பகட்டாகவாழனும்னு பட்டணத்துக்குப் போய் விட்டால் கிராமமெல்லாம் பாலைவனமாக வரண்டு போகாமல் பூத்துக் குலுங்கும் பூஞ்சோலையாகவா விளங்கும் ? நாலுகாசு உள்ளவர்களெல்லாம் நகரத்துக்குப் போய்விட்டால் மீதமிருக்கும் காசில்லாத ஏழைகள் வாரி வழங்கும் வள்ளல்களாகவா இருக்க முடியும் ?

சச்சு.—ஏனம்மா ? எந்த ஊராவது எக்கேடாவது கெட்டுப் போகட்டுமே, நமக்கென்ன ? ஏதோ படிச்சோம், நாலு காசு சம்பாதிச்சோம், நாசுக்கா வாழ்ந்தோம்னு இல்லாமே உனக்கு ஏனம்மா இந்த எண்ணமெல்லாம் ? அதிகம் படிச்சாலே இப்படித்தான் !

ஹேமா.—பணம் ! பணம்னு ஏம்பா அடிச்சுக்கிறீங்க. ஆறு காசு ஆறு பணம் ஆறுக்குச் சொந்தமாச்சுன்னு நீங்கத் தானே அடிக்கடி பாடிக்கிட்டிருப்பீங்க. இன்று நம்மிடம் உள்ள சொத்தே இன்னும் இரண்டு தலை முறைகளுக்கு கால்மேல் கால் போட்டுக்கொண்டு சாப்பிடபோதுமே !

சச்சு.—குன்றுபோல் சொத்துள்ளவன் கூட குந்திக்கிட்டு தின்னு ஒண்ணுமில்லேன்னு சொல்லக்கூடிய நாள் வந்திடுமம்மா.

ஹேமா.—அப்பா ! பொருள் இல்லாவிட்டால் சம்பாதித்துக் கொள்ளலாம். ஆனுல் அருள் இல்லாவிட்டால், இந்த உலகத்தில் ஒன்றுமே இல்லையப்பா. இது வரையில் நீங்கள் பணத்தைச் சேர்த்து பெட்டியில் வைத்து பூட்டித்தான் பார்க்கிறீர்கள்.

சச்சு.—அதில் எவ்வளவு மகிழ்ச்சி இருக்கிறதென்பது உனக்கென்ன தெரியும் ?

ஹேமா.—ஆமப்பா ! அதில் மகிழ்ச்சி யுண்டு. ஆனுல் தன் உடல் வருந்த சம்பாதித்த பொருளை ஏழைகளுக்கு கொடுக்கும் போது ஏற்படுகின்ற மகிழ்ச்சியிருக்கி

G.N.—4A

றதே, அதில் ஆயிரத்தில் ஒரு பங்குதானடப்பா, பணத்தைச் சேர்த்து பூட்டி வைக்கும்போது, நீங்கள் காணும் மகிழ்ச்சி.

(பாடல் ஒன்றை பாடிக்கொண்டு சன்யாசி ஒருவர் சாலேயில் செல் கின்ருர்.)

ஹேமா.— அப்பா ! சாமியார் பாடியதைக் கேட்டீர்களா ?

சச்சு.—ம்......

ஹேமா.—நான் படித்ததெல்லாம் பணம் சம்பாதிக்க வேண்டுமென்ற ஆசையால் அல்ல. கூழுக்கும் கூரைக்கும் ஏங்கி, சிக்கையும் சிரமத்தையும் தாங்கி அனலில் பட்டபுழுவெனத்துடித்து தினே தினே சாகின்ருர்களே கோடானுகோடி மக்கள். அவர்களுடைய துயர்களைத்தானப்பா நான் படித்தேன். அவர்கள் காணும் இன்பத்தில் தானப்பா என் இன்பம் இருக்கிறது. பணம் படைத்தவர்களெல்லாம் எப்படியும் தனக்கு ஏற்படுகின்ற துன்பத்தை துடைத்துக் கொள்வார்கள். ஆனுல் வறியவர்கள் கதியற்றவர்களாக சாக வேண்டியது தான். நலிந்தவர்கள் வாழுமிடம் நாட்டுப்புறம் ஆகையால் தான் நல்லிடைக் குறிச்சியை தேர்ந்தெடுத்தேன். மேலும் அது நான் பிறந்த ஊர். பெற்ற தாயை பிள்ளேயே வெறுத்தால் வேறு யார்தான் போற்றுவார்கள் ?

சச்சு.—ஹேமா....

ஹேமா.—அப்பா ! சின்னஞ்சிறு வயதிலேயே அன்னையை யிழந்து நிற்கும் என்னுடைய இதயம் சற்றேனும் நிம்மதி யடைய வேண்டுமானுல் ஏழை எளியவர்களுக்கு தொண்டுபுரிய என்னே ஆசீர்வதியுங்களப்பா. அவர்களுடைய துயரங்களை எனக்குத் துணை செய்யுங்களப்பா. நீங்கள் என்னை M. B. B. S. படிக்கவைத்தது பெரிதல்ல. நான் படித்ததெல்லாம் பாமர மக்களுக்குப் பாட்டாளி வர்க்கத்திற்கு பயன் படும்படி செய்ய பாதை விடுங்களப்பா. என் அன்னை சற்குணவதி சாந்தவல்லியின் நினைவாக "சாந்தா நர்ஸிங்ஹோம்" நல்லிடைக் குறிச்சியிலேயே, ஏற்படுத்த அன்போடு அனுமதி தருங்களப்பா. (ஹேமாவின் கண்களிலிருந்து நீர் துளிர்க்கிறது, அப்போது சேகர், வருகிருன்.)

சேகர்.—வாஸ்தவம்தான் அத்தான். காலம் போற போக்கை அனுசரித்து நாமும் நடந்துக்கினும். அதுதான் நல்லது. ஹேமா சிறுசு ! ஆசைப்படுது. நல்லிடைக் குறிச்சி யிலேத்தான் நர்ஸிங்ஹோம் ஆரம்பிச்சுட்டுப் போகட்டுமே.

சச்சு.— ..ம்..சரி....! ஹேமா ! உன் விருப்பப்படி நல்லிடைக்குறிச்சியிலேயே நர்ஸிங்ஹோம் ஆரம்பித்து விடுவோம். சரிதானே !

ஹேமா.—மனித உருவில் நடமாடுந்தெய்வம் நீங்கள் தானப்பா.

(திரை விழுகிறது) (தொடரும்)

அறிவிப்பு

"கிராம நலம்" பத்திரிகையின் விளம்பர விகிதம்

வெளி அட்டைப் பக்கம் ..	ரூ. 150- 0- 0
உள் அட்டைப் பக்கம் ..	ரூ. 125- 0- 0

இதர பக்கங்களில் :

பக்கம் ஒன்றுக்கு	ரூ. 100- 0- 0
அரைப் பக்கம்	ரூ. 60- 0- 0

சந்தா விவரம்

வருட சந்தா	ரூ. 1- 8- 0
ஆறு மாத சந்தா	ரூ. 0-12- 0

சந்தாத் தொகையை மணியார்டர் மூலம் அனுப்பலாம்.

தனிப் பிரதி—இரண்டு அணு

தனிப் பிரதிகளை அனுப்ப, தபால் பில்லேகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

மற்ற விவரங்களுக்கு, பின்வரும் விலாசத்துக்கு எழுதுங்கள் :

பொதுஜனத் தொடர்பு அதிகாரி,
(சமுதாய அபிவிருத்தி),
செக்ரடேரியட்,
சென்னை-9.

Public Relations Officer,
(Community Development),
Public (R.D.P.) Dept.,
Secretariat,
Madras-9.

இப் பத்திரிகை, சென்னை அரசாங்க, சமுதாய அபிவிருத்தி இலாகாவால் நடத்தப்படுகிறது. ஆயினும், இதில் வெளியிடப்படும் அபிப்பிராயங்களும், காணப்படும் கருத்துக்களும், சென்னை அரசாங்கத்தின் அதிகாரபூர்வமான அபிப்பிராயங்களை வெளியிடுகின்றன என்பதில்லை.

இப் பத்திரிகையில் வெளியிடும் பாட்டு, கதை, நாடகம் முதலியவற்றில் வரும் பெயர்கள் யாவையும் கற்பனையே. ஒருவரையும் குறிப்பிடுவன அல்ல.



..குறிஞ்சிப்பாடி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி-விற்பனை சங்கத்தாரால் நடத்தப்படும் சாயத்தொழிற்சாலை..நூலைச் சாயத்தில் நனைத்து, நூலுக்குச் சாயமேற்றுகிறார்கள்..



..வெள்ளையன்குப்பம் கிராமத்தில், சுமார் 5,000 ரூபாய் செலவில் கட்டப்பட்டிருக்கும் கிராம மருந்தகம்..இதைக்கட்ட, மக்கள் அளித்த பங்கு 2,500 ரூபாய்..



....மருவாய் எஸ்டேட்டில், வரப்போரங்களில், பசுந்தாளுரச் செடிகள் வளர்க்கப்படுகின்றன....

....நயினார்குப்பத்தில், தர மிகுந்த காளைகளுக்காகக் கட்டப்பட்டிருக்கும் மாட்டுக் கொட்டில்..காங்கய இனத்தைச் சேர்ந்த காளை, படத்தில் காணப்படுகிறது......

..கிருஷ்ணன்குப்பத்தில் பாய் பின்னும் தொழில்..பாய்களைத் தயாரித்து விற்க, ஒரு கூட்டுறவு சங்கமும் அமைக்கப்பட்டிருக்கிறது.



..குறிஞ்சிப்பாடியில், வார்தா செக்கு அமைக்கப்பட்டு, எண்ணெய் பிழியும் வேலையும் நடைபெற்று வருகிறது..பலர், இச்செக்கை இயக்குவதற்குரிய பயிற்சியையும் பெறுகிறார்கள்..



....மேட்டுப்பாளையத்தில், மக்கள் உழைப்பாகவும், பொருளாகவும் அளித்த பங்கு பெற்றுக் கட்டப்பட்ட கால்நடை மருத்துவ உதவி நிலையத்துக்கு முன்பாக, கால்நடைகளுக்கு நோய்த்தடுப்பு சிகிச்சை அளிக்கப்படுகிறது....



....ஆலப்பாக்கம் கிராமத்தில், 25 விவசாய இளைஞர்கள், நூற்பு சங்கம் ஒன்றை நடத்தி வருகிறார்கள்....

செய்தித் திரட்டு

சின்னசேலம் வட்டாரத்தில்

தென் கீரனூரிலும் நமசிவாயபுரத்திலும் கட்டப் பட்டிருக்கும் பள்ளிக்கூடக் கட்டிடங்களை, தென் ஆற்காடு ஜில்லா கலெக்டர், 30-1-56-ல், திறந்து வைத்தார். கலெக்டர் தலைமையில், ஹரிஜன தினம், நயினூர் பாளையத்தில் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. 1956, ஜனவரியில், அபிவிருத்தி வேலைகளுக்காக மக்கள் அளித்த பங்கு 731 ரூபாயாகும். அம்மாதத்தில், ரூ. 623-10-0 பெறுமான கதர் விற்கப்பட்டது.

குறிஞ்சிப்பாடி வட்டாரத்தில்

திருச்சாபுரத்தில், கிராமத் தலைவர்கள் பயிற்சி முகாம், 1956, ஜனவரி 6, 7, 8 தேதிகளில் நடைபெற்று, 50 தலைவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. பூசம் திருவிழாவின்போது, வடலூரில் (26-1-56 முதல் 28-1-56 வரை) பொருட்காட்சி நடத்தப்பட்டது. வார்தா செக்கை இயக்குவதற்கான பயிற்சி, 4 பேர் அடங்கிய முதல் கோஷ்டிக்கு அளிக்கப்பட்டுவிட்டது.

சிதம்பரம் வட்டாரத்தில்

இவ்வட்டாரத்தில் நிறைவேற்றப்பட்டுவரும் ஆற்று நீர் இறைப்புத் திட்டத்தின்கீழ், 1956, ஜனவரியில், சுமார் 100 ஏக்கர் பரப்புள்ள நிலத்துக்கு பாசன வசதி அளிக்கப் பட்டது. கீழமூங்கிலடியில் இருக்கும் கோழிப் பண்ணை களுக்கு, 10 சீமைச் சேவல்கள் விநியோகிக்கப்பட்டன. கிராம மக்கள் ஒத்துழைப்புடன், சுமார் 1½ மைல் நீள முள்ள சாதாரண ரஸ்தா ஒன்று, பழுத்தங்கரையையும், பெரியசாலையையும் இணைத்துப் போடப்பட்டது.

பண்ருட்டி வட்டாரத்தில்

பள்ளிக்கூடம் ஒன்று, 1956, ஜனவரியில், இந்த வட்டாரத்தில் ஆரம்பிக்கப்பட்டது. நான்கு மாதர் கை நுட்பத் தொழில் நிலையங்களும், இவ்வட்டாரத்தில், ஆரம்பிக்கப்பட்டன. முதியோர் பள்ளி ஒன்றும் ஆரம் பிக்கப்பட்டது. இம்மாதத்தில் அபிவிருத்தி வேலைகளுக் காக, மக்கள் அளித்த பங்கு 890 ரூபாயாகும்.

வாளாத்தி வட்டாரத்தில், கிராம மக்கள் அபிவிருத்தி வேலைகளுக்காக 1956, ஜனவரியில், 4,200 ரூபாய் அளித் திருக்கிறார்கள்.

செங்கல்பட்டு ஜில்லாவில்

சுமார் 15·5 ஏக்கர் நிலத்தில், ஜப்பானிய நெல் சாகுபடி முறை பின்பற்றப்பட்டது. 1956, ஜனவரியில், சுமார் 15 நிலப்பகுதிகளில், சீரிய விவசாய கருவிகளை எப்படி உபயோகிப்பது என்பது நிதர்சனையாகக் காண்பிக்கப்பட்டது. சுமார் 65·30 ஏக்கர் நிலத்தில், பசுந்தாளுரப் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டன. சுமார் 10·5 ஏக்கர் பரப்புள்ள தரிசு நிலம் பண்படுத்தப்பட்டது. 60 டன் கம்போஸ்ட் உரம் உற்பத்தி செய்யப்பட்டது. காய்கறி வகைகள், 11·16 ஏக்கர் நிலத்தில், சாகுபடி செய்யப்பட்டன. மாப்பேடு கிராமத்தில், 1956, ஜனவரி 15-ந் தேதியன்று கால்நடை கண்காட்சி நடைபெற்றது. சுமார் 600 பிராணிகள், அக் கண்காட்சியில் வைக்கப்பட்டன. 31 பரிசுகள் சிறந்த பிராணிகளுக்கென வழங்கப்பட்டன. மேல் நல்லத்தூரில், கோழிக் கண்காட்சி 1956, ஜனவரி, 27-ந்தேதியன்று, நடைபெற்றது. 455 நோயுற்ற பிராணிகளுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டு, 2,431 பிராணிகளுக்கு நோய்த் தடுப்பு சிகிச்சையும் அளிக்கப்பட்டது. இரு புதிய கூட்டுறவு சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன. 3 கிணறு வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டன. 5 பர்லாங்கு நீளத்துக்குக் கப்பி ரஸ்தாவும், 2 மைல் நீளத்துக்கு சாதாரண ரஸ்தாவும் அமைக்கப்பட்டன. மாதர் சங்கம் ஒன்றும், சமூகக் கல்வி நிலையம் ஒன்றும், இளைஞர் மன்றம் ஒன்றும் ஆரம்பிக்கப் பட்டன. ஆனூரில் கட்டப்படவிருக்கும் பள்ளி கட்டிடத்துக்கு, அடிஷனல் அபிவிருத்திக் கமிஷனர், அஸ்திவாரக்கல் நாட்டினார். கடம்பத்தூரில், 5,000 ரூபாய் செலவில் ஒரு பள்ளிக்கூடக் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டது 20,000 ரூபாய் செலவில், உயர்தர ஆரம்ப பாடசாலை ஒன்றை பட்டறைப்பெரும்புதூரில் கட்ட ஏற்பாடு செய்யப்பட்டு, வேலையும் ஆரம்பிக்கப்பட்டது. திருக்கழுக்குன்றம் வட்டா ரத்துக்கு, வட இந்தியாவிலிருந்து வந்த திட்ட அதிகாரிகள் 1956, ஜனவரி 12-ந் தேதி விஜயம் செய்தனர். திருக் கழுக்குன்றத்தில், 1956, ஜனவரி 26-ட முதல் பிப்ரவரி 1-நதேதி வரை, சிறு தொழில் வாகனப் பட்டறை நிறுத்தப்பட்டிருந்தது. அங்குள்ள தச்சர், கருமாரர்கள் முதலிய தொழிலாளர்கள், அவ்வாகனப் பட்டறையில் உள்ள யந்திரக் கருவிகளை எப்படி உபயோகிப்பது என்பதைக் கற்றுக்கொண்டார்கள்.

குண்டடம் வட்டாரத்தில்

இவ்வட்டாரம் 1955, அக்டோபர் 1-ந் தேதியன்று ஆரம்பிக்கப்பட்டது. 1956, ஜனவரியில், 70 நோயுற்ற பிராணிகளுக்குச் சிகிச்சையளிக்கப்பட்டது. 457 மாடு களுக்கும், 435 ஆடுகளுக்கும், 50 நாய்களுக்கும் நோய்த் தடுப்பு சிகிச்சை அளிக்கப்பட்டது. ஹரிஜன குடும்பங் களுக்கு விநியோகிக்க, 22 இனத் தரமிகுந்த கோழிகள் விலைக்கு வாங்கப்பட்டன. வாரபாளையத்தில், கொல்லர்

களுக்காக, குடிசைத் தொழில் கூட்டுறவு சங்கம் அமைக்கப் பட்டது. சுமார் 438 ரூபாய் பெறுமான கதர் விற்கப்பட்டது. இவ்வட்டாரத்திலுள்ள கிராம சேவக்குகள், 1956, ஜனவரியில், 19 ஊர்களில், சேரிகளைத் துப்புரவு செய்திருக் கின்றனர். 19 பொதுக்கூட்டங்களையும் அவர்கள் நடத்தி யிருக்கிறார்கள். 1956, ஜனவரியில், 30,600 ரூபாய், மக்களுக்குக் கடனாக வழங்கப்பட்டது.

ராமநாதபுரம் ஜில்லாவில்

ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டாரத்திலே, 1956, ஜனவரியில், 243 ரூபாய் பெறுமான கதர் உண்டியல்கள் விற்கப் பட்டன. 780 நோயுற்ற பிராணிகளுக்கு சிகிச்சை யளிக்கப் பட்டது. 1,537 பிராணிகளுக்கு நோய்த் தடுப்பு ஊசி போடப்பட்டது. விவசாய வளர்ச்சித் திட்ட அதிகாரிகள் அனைவரும், புயல் நிவாரண வேலைகளில் ஈடுபட்டனர். உரம், விதை முதலியவைகளை விலைக்கு வாங்குவதற்கென, குறுகிய காலக் கடனாக, 18,770 ரூபாய் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. சிவகாசி வட்டாரத்தில், 4 சமூகக் கல்வி நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

திருமங்கலம் வட்டாரத்தில்

இவ்வட்டாரத்திலே, 1956, ஜனவரியில், ஜப்பானிய நெல் சாகுபடிமுறை, 4·22 ஏக்கர் நிலத்தில் பின்பற்றப் பட்டது. 7 டன் அமோனியம் சல்பேட்டும், சுமார் $1\frac{1}{4}$ டன் சூபர் பாஸ்பேட்டும் விநியோகிக்கப்பட்டன. 200 டன் கம்போஸ்ட் உரம், நெற்பயிருக்காக உபயோகிக்கப்பட்டது. 171 நோயுற்ற கால்நடைப் பிராணிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. 1,935 ஆடுகளுக்கும், 388 மாடுகளுக்கும், 690 கோழிகளுக்கும் நோய்த் தடுப்பு சிகிச்சை அளிக்கப் பட்டது. திருமங்கலம், சென்னம்பட்டி, பாசவநத்தம் முதலிய ஊர்களில் மாலைப் பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டன. பொட்டல்பட்டியிலும், மறவங்குளத்திலும் சமூகக் கல்வி நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டன. ஒடைப்பட்டியில், மக்கள் மன மகிழ் மன்றம் ஒன்றும், ராயபாளையத்தில் நூல் நிலையமொன்றும், ஆரம்பிக்கப்பட்டு, எஸ். மீனாக்ஷி புரத்தில், விவசாய இளைஞர் மன்றமும், அவல்சூராம் பட்டியில் இளைஞர் மன்றமும், மாதர் சங்கமும் அமைக்கப் பட்டன. 3 ரஸ்தா வேலைகள், 1956, ஜனவரியில் பூர்த்தி செய்யப்பட்டன. 57 சர்க்காக்கள் விநியோகிக்கப்பட்டன. சுமார் 392 ரூபாய் பெறுமான கதர் விற்கப்பட்டது.

புதுக்கோட்டை வட்டாரத்தில்

மொத்தம் $3\frac{1}{2}$ மைல் நீளமுள்ள ரஸ்தாவேலை, இவ் வட்டாரத்திலே, 1956, ஜனவரியில், பூர்த்தி செய்யப் பட்டது. மாயனூரிலிருந்து, அறந்தாங்கி-புதுக்கோட்டை சாலைக்கும், அன்னவாசல் சாலையிலிருந்து எல்லைப் பட்டிக்கும், பொம்மனபுரத்திலிருந்து மேலக்குடிக்கும், ஆலங்குடியிலிருந்து குளவாய்ப்பட்டிக்கும், ரஸ்தா அமைக்கும் வேலை ஆரம்பிக்கப்பட்டது. 46 கம்போஸ்ட் உரக்குழிகள் தோண்டப்பட்டன. 24·4 மணங்கு பொறுக்கு விதைகளும், 65 டன் உரமும், 1956, ஜனவரியில், விநியோகிக்கப்பட்டன. இரண்டு குடிநீர்க் கிணறுகள் அமைக்கப்பட்டன. 25·70 ஏக்கர் நிலத்தில் பசுந்தாளுரப் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டன. 149 மரங்கள் நடப் பட்டன. 346 கால்நடைப் பிராணிகளுக்கு நோய்தடுப்பு சிகிச்சை அளிக்கப்பட்டது. 30 நோயுற்ற பிராணிகளுக்கு மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டது. குறைந்த விலையில், உயர்ரக முட்டைகள் விவசாயிகளுக்கு விநியோகிக்கப் பட்டன. 1956, ஜனவரியில், 125 ரூபாய் பெறுமான கதர் விற்கப்பட்டது. 290 ரூபாய் பெறுமான கதர் உண்டியல் களும் விற்கப்பட்டன. அபிவிருத்தி வேலைகளுக்காக, மக்கள், உழைப்பு மூலமாகவும், பொருள் மூலமாகவும் 1956, ஜனவரியில், அளித்த பங்கு மொத்தம் 3,012 ரூபாயாகும். அரசினர் அம்மாதத்தில் செலவு செய்த மொத்தத் தொகை 9,979 ரூபாய்.

முசிரி வட்டாரத்தில்

இவ்வட்டாரத்திலே, 1956, ஜனவரியில், 2 மைல் நீள முள்ள கெட்டித்த ரஸ்தா போடப்பட்டது. 920 கெஜ நீளத்துக்கு, கட்டுமான வேலை மூலம், ஜலதாரை வசதி செய்து கொடுக்கப்பட்டது. மூன்று பள்ளிக்கட்டிட வேலைகள் பூர்த்தியாகி விட்டன. இதுவரை 8 பள்ளிக் கட்டிடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. விவசாய வளர்ச்சித் திட்ட அதி காரி 29 கிராமங்களுக்கு விஜயம் செய்து, பசுந்தாளுரப் பயிர் விளைச்சல், பொறுக்கு விதைகளின் உபயோகம், கம்போஸ்ட் உர உற்பத்தி முதலியவற்றைப்பற்றி, கிராம மக்களுக்கு எடுத்துரைத்தார். 3·50 ஏக்கர் நிலத்தில், சீமை அகத்தி விதைக்கப்பட்டது. 31 கம்போஸ்ட் உரக் குழிகள் தோண்டப்பட்டு சீர் செய்யப்பட்டன. 29 டன் கம்போஸ்ட் உரம் தயாரிக்கப்பட்டது. மேலும் சீரான பருத்தி விவசாயமுறை, 11 ஏக்கர் நிலத்தில் பின்பற்றப் பட்டது. 820 மரக் கன்றுகள் நடப்பட்டன. மாட்டுத் தீவனத்துக்காக, புல் விளைவிக்க, 8,000 கினியா புல் செடிக் கன்றுகள் விநியோகிக்கப்பட்டன. பயிர்களை பீடிக் கும் பூச்சி நோய்களை ஒழிக்க, 201 பவுண்டு பூச்சி மருந்து விநியோகிக்கப்பட்டது. மேலும், 14·2 டன் அமோனியம் சல்பேட்டும், 0·4 டன் சூபர் பாஸ்பேட்டும் விநியோகிக்கப் பட்டன. 3 முதியோர் பள்ளிகள், 2 சமூகக் கல்வி நிலை யங்கள், 2 சிறுவர் பூங்காக்கள், 2 மக்கள் மனமகிழ் மன்றங்கள், 2 மாதர் நல சங்கங்கள் ஆகியவை, 1956, ஜனவரியில், இவ்வட்டாரத்திலே ஆரம்பிக்கப்பட்டன.

பெரம்பலூர் வட்டாரத்தில்

இவ் வட்டாரத்திலே, 1956, ஜனவரியில், 254 ரூபாய் பெறுமான கதர் விற்கப்பட்டது. 100 பவுண்டு எடை யுள்ள பொறுக்கு விதைகள் விநியோகிக்கப்பட்டன. 3 ஏக்கர் நிலத்தில், விதைப்பண்ணை ஆரம்பிக்கப்பட்டது. 25 டன் அமோனியம் சல்பேட்டும், 5 டன் சூபர் பாஸ்பேட்டும் விநியோகிக்கப்பட்டன. பூலம்பாடி சேரியில் மாதர்களுக் காக சமூகக் கல்வி நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. ஒரு இளைஞர் மன்றமும், இரு மக்கள் மனமகிழ் மன்றங்களும்

ஆரம்பிக்கப்பட்டன. இரண்டு கிணறு வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டன. குறுகிய காலக் கடனாக 13,780 ரூபாயும், தொழில் வளர்ச்சிக்காக 600 ரூபாயும், வீடு கட்டுவதற்காக 1,450 ரூபாயும், உரம் வாங்க 870 ரூபாயும், நீர்ப்பாசனத்துக்காக 700 ரூபாயும், ஆகமொத்தம் 17,400 ரூபாய் கடனாக வழங்கப்பட்டிருக்கிறது. ஐந்து கிராமங்களில் ஹரிஜன தினம் கொண்டாடப்பட்டது.

கரூர் வட்டாரத்தில்

இதுவரை இவ்வட்டாரத்தில் மொத்தம் 52 மைல் நீளத்துக்கு மண் ரஸ்தாக்கள் போடப்பட்டுள்ளன. சமுதாய நலத் திட்டத்தின்கீழ், எட்டு கிணறு வேலைகள் 1956, ஜனவரியில், பூர்த்தி செய்யப்பட்டன. இரு மாதர் சங்கங்கள் அமைக்கப்பட்டன. எலவனூரில் பலகாரிய கூட்டுறவு சங்கம் அமைக்கப்பட்டது. ஏழு கிராமங்களில் விவசாய வாரம் கொண்டாடப்பட்டது.

பாபநாசம் (தெற்கு) வட்டாரத்தில்

இவ்வட்டாரத்திலே, 1956, ஜனவரியில், 138 டன் கம்போஸ்ட் உரம் உற்பத்தி செய்யப்பட்டது. 122 டன் உரம் விநியோகிக்கப்பட்டது. கனிதரும் மரங்களின் கன்றுகள் 575-ம், மற்றும் 500 இதர மரக் கன்றுகளும் நடப்பட்டன. இதுவரை, 86 ஏக்கர் தரிசு நிலம், விவசாயத்துக்காகப் பண்படுத்தப்பட்டிருக்கிறது. பத்து தரமிகுந்த கோழிகள் விநியோகிக்கப்பட்டன. 6,388 கால்நடைப் பிராணிகளுக்கு நோய்த் தடுப்பு சிகிச்சையும், 431 நோயுற்ற பிராணிகளுக்கு மருத்துவ சிகிச்சையும் அளிக்கப்பட்டன. 3 குழாய் கிணறுகள் அமைக்கப்பட்டன. 4 வடி சாக்கடைக் குழிகள் தோண்டப்பட்டன. புதிய பள்ளி ஒன்று ஆரம்பிக்கப்பட்டதுடன், புதிதாக 5 முதியோர் பள்ளிகளும் ஆரம்பிக்கப்பட்டன. இதுவரை, இவ்வட்டாரத்தில் 18 தேனீக் கூண்டுகள் விநியோகிக்கப்பட்டிருக்கின்றன. 15,000 ரூபாய் செலவில், ஊத்துக்காடு கிராம ரஸ்தாவில், 10 பர்லாங்கு நீளத்துக்குக் கப்பி அடிக்கப்பட்டது. இச்செலவில் பாதியை ரொக்கமாகவும், உழைப்பாகவும் கிராம மக்கள் அளித்திருக்கிறார்கள். கம்பையநத்தம், ஜம்புகாபுரம், மேலகொருக்கப்பட்டு, தலைவாரிப்பு, அன்னகுடி முதலிய ஊர்களைச் சேர்ந்த இளைஞர் மன்ற அங்கத்தினர்கள், அரசினரிடமிருந்து உதவி எதுவும் பெறாது, 5 பர்லாங்கு நீளத்துக்கு சாதாரண ரஸ்தாக்களை புதிதாக அமைத்ததோடு, சுமார் 3 மைல் நீளத்துக்கு, பழைய ரஸ்தாக்களைச் செப்பனிட்டும், பொது நலத் தொண்டாற்றியுள்ளனர். வெளியார் உதவியின்றி, கால்வாய்களில் $5\frac{1}{2}$ மைல் நீளத்துக்கு வண்டல் அகற்றும் பணியை, கம்பையநத்தம் விவசாயிகள் புரிந்துள்ளார்கள். 11 சர்க்காக்கள் விநியோகிக்கப்பட்டன.

கும்பகோணம் (தெற்கு) வட்டாரத்தில்

இவ்வட்டாரத்திலே, 1956, ஜனவரியில், 14 மணங்கு அமோனியம் சல்பேட் விநியோகிக்கப்பட்டது. காய்கறி, பழத்தோட்ட சாகுபடி 4 ஏக்கர் நிலத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டது. குறுகிய காலக் கடனாக 11,200 ரூபாயும், வீடுகட்டுவதற்குக் கடனாக 14,950 ரூபாயும் மக்களுக்கு அளிக்கப்பட்டது.

சீர்காழி வட்டாரத்தில்

ஏற்கனவே இவ்வட்டாரத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்த வண்டலகற்றும் வேலையும், ஏரி செப்பனிடும் வேலையும், 1956, ஜனவரியில், பூர்த்தி செய்யப்பட்டன. இரு இளைஞர் மன்றங்கள் ஆரம்பிக்கப்பட்டன. ஏழு கூட்டுறவு சங்கங்களுக்கு, மொத்தம் 15,360 ரூபாயை கூட்டுறவு மத்திய பாங்கு, கடனாக அளித்தது. 1956, ஜனவரியில், 1,309 கால்நடைப் பிராணிகளுக்கு நோய்த் தடுப்பு சிகிச்சை அளிக்கப்பட்டது. சுமார் 466 ரூபாய் பெறுமான கதர் விற்கப்பட்டது. 25 சர்க்காக்களும் விற்கப்பட்டன. ராதாநல்லூர் ரஸ்தாவில் கப்பி அடிக்கும் வேலை பூர்த்தியாகி விட்டது. புதுத்துறையில், கிணறு வேலை பூர்த்தியாகி விட்டது.

திருத்துறைப்பூண்டி வட்டாரத்தில்

பள்ளிசந்தம் குக்கிராமத்திற்கு ஒரு மைல் நீளமுள்ள நுழைவு ரஸ்தா ஒன்றை கிராம மக்கள் அமைத்தனர். $7\frac{1}{2}$ பர்லாங்கு நீளத்துக்கு, ரஸ்தாக்கள், மக்களால், 1956, ஜனவரியில், செப்பனிடப்பட்டன. திருத்தாங்கூரில் கிணறு வேலையும், குரும்பலில் மற்றொரு கிணறு வேலையும், பூர்த்தி செய்யப்பட்டன. நாகப்பட்டிணம் - திருத்துறைப்பூண்டி ரஸ்தாவுக்கருகில், ஜல தாரைக் குழாய்கள் அமைக்கும் வேலை பூர்த்தி செய்யப்பட்டது. 39 சேரிகளில், துப்புரவு வேலை நடைபெற்றது. 10 வடி சாக்கடைக் குழிகள் தோண்டப்பட்டன. 1956, ஜனவரியில், 1,000 மணங்கு பொறுக்கு விதைகளும், 189 மணங்கு உரமும், 50 விவசாயக் கருவிகளும், உழவர்களுக்கு விநியோகிக்கப்பட்டன. மேலும், 11 ஏக்கர் நிலத்தில், காய்கறித் தோட்ட சாகுபடி ஆரம்பிக்கப்பட்டது. கனிதரும் மரக் கன்றுகள் 262-ம், இதர மரக் கன்றுகள் 30,246-ம் நடப்பட்டன. விளாக்குடியில், ரேடியோ மண்டபம் கட்டி முடிக்கப்பட்டு விட்டது. மேட்டுப்பாளையம் பஞ்சாயத்தில், ரேடியோ செட் அமைக்கப்பட்டது. ஒரு மாலைப்பள்ளியும், ஒரு மக்கள் மன மகிழ் மன்றமும் ஆரம்பிக்கப்பட்டன. சுமார் 191 ரூபாய் பெறுமான கதர் துணியும், 23 ரூபாய் பெறுமான கதர் தொழிலுக்கான உபகரணங்களும் விற்கப்பட்டன. 496 ரூபாய் பெறுமான கதர் உண்டியல்களும் விற்கப்பட்டன. பசுந்தாளுர உபயோகம் விவசாயிகளிடையே வெகுவாகப் பரவுதற்காக, பசுந்தாளுரச் செடிகளை பல கிராமங்களில், 2,433 ஏக்கா நிலப் பகுதிகளில், வளர்ப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த இயக்கத்துக்கு விவசாய அமைச்சர் தலைமை வகித்தார். புயல் நிவாரண நிதியிலிருந்து, 10,870 ரூபாய் ஆலத்தம்பாடி பகுதியில் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அளிக்கப்பட்டது.

சர்வதேச விவசாய இளைஞர் பயிற்சித் திட்டம்

ஸ்ரீ கே. வி. சுப்பாராவ்

மத்திய கிழக்கு, ஆசிய நாடுகளில் சர்வதேச விவசாய இளைஞர் பயிற்சித் திட்டத்தை நிறைவேற்றும் பிராந்திய தலைவர் ஸ்ரீ கெல்லார்ட், 1956-ம் ஆண்டு பிப்ரவரி 7-ந் தேதியன்று, சென்னை வந்து சேர்ந்தார். அவர், இப்போது உலகம் பூராவையும் சுற்றி பல நாடுகளுக்கு விஜயம் செய்து, அந்தந்த நாடுகளில் சர்வதேச விவசாய இளைஞர் பயிற்சித் திட்டத்தின்கீழ் அமெரிக்காவுக்குச் சென்று பயிற்சி பெற்றுத் தங்கள் நாடுகளுக்குத் திரும்பி வந்துள்ளவர்கள், தங்கள் நாடுகளிலே விவசாயத்துறையில் என்னென்ன செய்து வருகிறார்கள் என்பதை நேரில் கண்டறிந்து வருகிறார்.

ஸ்ரீ கெல்லார்ட் சென்னைக்கு விஜயம் செய்தபோது, அமெரிக்காவுக்குச் சென்று பயிற்சி பெற்றுத் திரும்பி வந்துள்ள விவசாய இளைஞர்கள் ஸ்ரீமான்கள் எ. கே. நடராஜன், பி. வெங்கடேஸ்வர ராவ், சி. பொப்பைய்யா, எஸ். கே. ஸ்வாமி, வெங்கடாசலம் முதலியோரும், கிராம நல துணை ஆசிரியரும் அவரை விமான நிலையத்தில் வரவேற்றார்கள்.

ஸ்ரீ கெல்லார்ட்தான், இந்த விவசாய பயிற்சித் திட்டத்தை வெற்றிகரமாக உருவாக்கி நடத்தியவர் என்றும் மிகையாகாது. இந்தியாவிலிருந்து அமெரிக்காவுக்குச் சென்ற இளைஞர்கள், கோதுமை, பார்லி, சோளம் முதலிய தானியங்கள் எங்கெங்கு அமோகமாக விளைகின்றன என்பதை நேரில் பார்த்தறிவதற்கு, ஸ்ரீ கெல்லார்ட் திட்டம் வகுத்துக் கொடுத்தார்.

இந்திய இளைஞர்கள், யந்திரங்கள் மூலமாகவே பண்ணை வேலைகள் பல நடைபெறுவதை நேரில் பார்த்தனர். பண்ணைகளில் வாழும் அமெரிக்க விவசாயிகளின் குடும்பங்களோடு சேர்ந்து, இந்த இளைஞர்கள் சிறிது நாட்கள் தங்கியிருந்து, பண்ணை வேலைகளில் ஈடுபட்டனர். பயிற்சி பெறும் இளைஞர், அமெரிக்காவிலே, கான்ஸாஸ் பிராந்தியத்தில் கோதுமை விளைவதையும் பார்த்துவிட்டு, இயற்கை வளமிகுந்த மோண்டானா பிரதேசத்துக்கும் சென்று, இவ்வாறாக, அமெரிக்காவில் பல பிராந்தியங்களுக்குச் சென்று அந்தந்தப் பிராந்தியங்களிலே விவசாயம் எவ்வாறு நடைபெறுகிறது என்பதை நேரில் கண்டறிந்தார்கள். பண்ணை வேலைகளை, பண்ணைகளில் வாழும் விவசாயிகளே கவனித்து வந்தனர். பண்ணையாட்களைக் கூலிக்கு நியமிப்பதில்லை. "அப்படியென்றால், நீங்க எல்லாரும் ரொம்ப கஷ்டப்பட்டு உழைக்கணுமே" என்று நான், ஸ்ரீ கெல்லார்டை கேட்டேன். "ஆமா, வைக்கோல் பொதி கட்டுவது வேடிக்கையான சமாசாரமல்ல!" என்று அவர் புன் சிரிப்புடன் பதிலளித்தார்.

அமெரிக்காவிலுள்ள தேசிய 4–H மன்றமும், போர்டு ஸ்தாபனமும் சேர்ந்து, இந்த பயிற்சித் திட்டத்தை 1953-ம் ஆண்டில் ஆரம்பித்து வைத்தன. இத்திட்டத்தில், முதன் முதலாக இந்தியாதான் பங்கெடுத்துக் கொண்டது. இப்போது, சுமார் 10 நாடுகள் இத்திட்டத்தில் பங்கெடுத்துள்ளன. இதுவரை, இந்தியாவிலிருந்து சுமார் (ஆண், பெண் உள்பட) 80 பயிற்சியாளர்கள், அமெரிக்காவுக்குச் சென்று, பயிற்சி பெற்றிருக்கிறார்கள்.

"இத் திட்டத்தின் முக்கிய நோக்கம், இளைஞர்களை கிராமங்களுக்கு அனுப்புவதேயாகும். அங்கு, அவர்கள் உழைத்தாக வேண்டும். விவசாயத் துறையைப் பற்றியே அவர்கள் சிந்தித்தாகவேண்டும்" என்று ஸ்ரீ கெல்லார்ட் குறிப்பிட்டார். இந்தியாவில் நடைபெறும் தேசிய வளர்ச்சித் திட்டங்களுக்கு, இந்த விவசாய இளைஞர்கள் பெரிதும் சேவை செய்யமுடியும். அதன் மூலம், கிராமப் புனருத்தாரண வேலைகளில் மக்கள் காட்டும் ஆர்வம் மேலும் பெருக வழியேற்படும்.

புது டில்லியில், 1955, ஏப்ரலில் அகில இந்திய விவசாயிகள் மகாநாடு நடைபெற்றபோது (அமெரிக்காவுக்குச் சென்று விவசாய பயிற்சி பெற்றுத் திரும்பிய) இந்திய விவசாய இளைஞர்கள் மிகவும் திறமை வாய்ந்தவர்கள் என்பது புலனாயிற்று.

ஸ்ரீ பி. வெங்கடேஸ்வர ராவ் அமெரிக்காவுக்குச் சென்று பயிற்சி பெற்றவர். அவர் 450 ஏக்கர் பரப்புள்ள பண்ணையின் சொந்தக்காரர். தற்போது, இவர் விவசாய மன்றம் ஒன்றை அமைத்து, மண்வள பாதுகாப்பு முறைகளை, தமது சகாக்களுக்குக் கற்றுத்தருகிறார்.

ஸ்ரீ எஸ். கே. சுவாமி, விவசாயிகள் அரங்கு ஒன்றை ஆரம்பித்திருக்கிறார். இவரும் அமெரிக்காவில் பயிற்சி பெற்றவர். இந்த விவசாயிகள் அரங்கின் முக்கிய குறிக்கோள்களாவன :—இந்தியாவில் உள்ள விவசாயிகள் சமாளித்தாக வேண்டிய பிரச்னைகளைப்பற்றி ஆராய்தல், விவசாய உற்பத்தியாளர், கிராம மாதர்கள் ஆகியோர் நலனைக் கவனித்தல்.

சென்னைக்கு விஜயம் செய்த ஸ்ரீ கெல்லார்ட் அவர்களுக்கு விருந்தளிக்கப்பட்டபோது, அவர் தாம் இத் திட்டத்தை மேலும் பயனுள்ள வகையில் வெற்றிகரமாக நடத்தி, இரு பெரிய ஜனநாயகக் குடியரசுகளாக விளங்கும் இந்தியா—அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கிடையே மேற்கொண்டும் சிறந்த உறவை ஏற்படுத்த, பாடுபடப் போவதாகக் கூறினார்.

சோளப்பயிர் நடவு

ஸ்ரீ எஸ். குமரன், கிராம சேவக், சாப்டூர், கல்லுப்பட்டி வட்டாரம்

[சோளப்பயிரைத் தாக்கும் கரிப்பூட்டை, செந்தாளை முதலிய நோய்களைப் பற்றியும், அந்நோய்கள் பிடிக்கா வண்ணம் சோளப்பயிரைக் காப்பதுபற்றியும், இக்கட்டுரையாளர் இங்கு விவரித்திருக்கிறார். சோளப்பயிர் நடவு காலத்தில் இக்குறிப்புகள் விவசாயிகளுக்கு நன்கு பயன்படும்.

—ஆசிரியர்]

மணியக்காரர்.—வாங்க, வாங்க, நல்ல வேளையா வந்தீங்க, இப்பத்தான் உங்களைப்பத்தி பேசிக்கிட்டு இருந்தமுங்க. மூனு மாதத்துக்கு முன்னாலே நீங்க படிப் படியாச் சொன்ன யோசனைப்படி, நல்ல நெல் விதையைப் பொருக்கி, மருந்து கலந்து, நாத்துப் பாவி நட்டு, குறிப்பிட்ட காலத்தில் மருந்துப் பொடியை தூவாததினாலே பாருங்க, பெருத்த சேதம் இந்த வருஷம் ஏற்பட்டிருக்கு. பாதி பூச்சியாலும், பாதி கொலை நோயினாலும் சேதம். நீர்ச்சாவியினாலும் ரொம்ப சேதம் ஏற்பட்டிருக்குதுங்க. இப்ப, சோள விதைப்பு காலமா இருக்கு பாருங்க, அதினாலே வேலை அதிகமாக இருக்கு. பிசுங்க முடியலிங்க, வேலையோடு வேலையா உங்க யோசனையைக் கேட்டு அதுபடி நடக்கனுமுன்னு இருக்கரேமுங்க. சோளப் பயிருக்கு என்னென்ன சீக்கு வருது. எப்படி வருது, அதுக்கு என்ன செய்யனுமுன்னு சொல்லுங்க.

கிராமசேவக்.—சோளப்பயிர் முக்கியமாக ஒரு நோயினாலும், இரண்டு பூச்சியினாலும் பாதிக்கப்பட்டு பெருத்த நஷ்டத்தைக்கொடுக்கின்றது.

மணியக்காரர்.—அது என்னெங்க, ஒவ்வொன்னு நல்லாச் சொல்லுங்க.

கிராம சேவக்.—நன்றாக விளைந்த சோளக்கதிர்கள் சிலவற்றில் வெள்ளைப் போர்வையினால் மூடப்பட்ட கருப்புப் பொடியுடன் கூடிய சில பைகளைப் பார்க்கலாம். இது சோளத்தைப்போல் தென்படும். ஆனால், அதை உடைத்துப் பார்த்தால் உள்ளே கருப்புப்பொடி இருக்கும்.

மணியக்காரர்.—ஆமாங்க, போனவருஷம் எங்க அண்ணன் சுப்பையா தோட்டத்திலே நீங்க சொல்லுரது போலே ஏராளமாக இருந்துச்சுங்க. இது ஒரு புதுதினிசு கதிருன்னுலோ நெனச்சோம்! அது என்னங்க.

கிராம சேவக்.—அது புதுதினிசு கதிர் இல்லை, ஒரு வகைப் பட்ட வியாதியாகும். இதைக் கரிப்பூட்டை நோய் என்று கூறுவார்கள்.

மணியக்காரர்.—அது எப்படிங்க வருது.

கிராம சேவக்.—சோளக்கதிர் நன்றாக விளைவு ஏற்பட்டிருக்கும் சமயம, கரிப்பூட்டை என்ற வியாதியினால் பாதிக்கப் பட்டிருக்கும் கதிரும் முதிர்ச்சியடைகிறது. முதிர்ச்சியடைந்த கரிப்பூட்டையிலுள்ள மணிகள் வெடிக்க ஆரம்பித்தவுடன், கருப்புப் பொடியானது காற்றில் பறக்க ஆரம்பிக்கின்றது. இந்தப் பொடிக்கு "ஸ்போர்" என்று பெயர். காற்றில் பறந்து செல்லும் கருப்புப்பொடியானது மற்றக் கதிரிலுள்ள சோள மணிகளில் ஒட்டிக் கொள்கின்றது. இதை "பூஞ்சாள விதை" என்றும் கூறுவார்கள். நாம் விதைக்காகத் தயார் செய்து வைக்கும் சோளத்தில் கூட இந்தக் கரிப்பொடி ஒட்டிக்கொண்டிருக்கும். ஆனால், அதை நாம் பார்ப்பதுமில்லை, கவனிப்பதுமில்லை. இந்தச் சோள விதையை நாற்றுப் போட்டு நட ஆரம்பிக்கின்றோம். இந்த பூஞ்சாள விதையானது (கருப்புப்பொடி) பயிரின் தண்டின் நடுவிலே வளர ஆரம்பிக்கின்றது. கதிர் பால் பிடித்துத் திரளும் சமயம், தண்டின் நடுவில் வளர்ந்துவரும் பூஞ்சாளம், சில சோள மணிகளில் நுழைந்து கரிப்பூட்டைகளை தோற்றுவிக்கின்றது. சில கதிரைப் பரிசோதித்துப் பார்த்தால் சோள முத்தின் எண்ணிக்கையைவிட கரிப்பூட்டை முத்தின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும். இந்த வியாதியால் சில இடத்தில் ஏராளமான சேதம் உண்டாகின்றது.

மணியக்காரர்.—நீங்க சொன்னமாதிரி தாங்க, சுப்பையா தோட்டத்திலே கூட இருந்துச்சு. அந்த வருஷம் பாருங்க, பாதி விளைச்சல்தான், அவருக்கு. இந்த வியாதி வராமே தடுக்க வழியில்லையிங்களா?

கிராம சேவக்.—வழி இருக்கின்றது. இந்த வியாதி விதையிலே இருந்து உண்டாகின்றது. ஆகையால் நாம் விதைக்காக எடுத்துவைக்கும் சோளத்தை சுத்தப்படுத்தி பின்புதான் நாற்றுப்போடவேண்டும்.

மணியக்காரர்.—எப்படிங்க சுத்தப்படுத்துரது, தண்ணீரில் போட்டு கழுவவேண்டுங்களா?

கிராம சேவக்.—தண்ணீரில் சுத்தம் செய்தால் அது நீங்கி விடாது. இதை எரிக்கொள்ளி மருந்தில் போட்டு கலக்க வேண்டும். 6 படி சாளத்திற்கு 1 அவுன்ஸ் கந்தகப் பொடியைப் போட்டு, சாக்கிலாவது, மூடிய டப்பாவிலாவது அல்லது விவசாய ஆபீஸில் கிடைக்கும் (கலக்கும்) தகர டப்பாவிலாவது போட்டு, நன்றாகக் கலக்கவேண்டும் அப்பொழுது கந்தகப்பொடி தானியத்தின்மேல் ஒட்டிக்

கொள்கின்றது. இந்த மருந்தானது, பூஞ்சாளத்தின் முளைக்கும் சக்தியைக் குறைத்துவிடுகின்றது. இப்படி தொடர்ந்தாற்போல் ஒவ்வொரு வருடமும் செய்து வந்தால், நம் நாட்டில், கரிப்பூட்டை, சோளத்தில் உண் டாகாது.

மணியக்காரர்.—நல்லதுங்க, உங்களுக்குக் கோடிப்புண்ணிய முங்க. நீங்க சொன்னப்படி கந்தகப்பொடியை வாங்கி விதைச் சோளத்திலே கலந்து நாத்து போடுறமுங்க. இன்னும், பாக்கி இருக்கிற வியாதியெ சொல்லுங்க, நேரமாச்சு, மாடெல்லாம் பட்டினியா கிடக்குங்க.

கிராம சேவக்.—அடுத்தபடியாக ஒரு வியாதி இருக்கின்றது. அதை நினைத்தால் வயிறு எரியும். இந்த வியாதி வந்தால் கோவிலில் கிடாக்களை வெட்டும்போது எப்படி ரத்தம் சிகப்பாக ஓடுகின்றதோ, அதுபோல சோளப் பயிரின் சோகைகள் எல்லாம் சிகப்பாகக் காட்சி அளிக்கும்.

மணியக்காரர்.—ஆமாங்க, போனவருஷம், பூசாரி தோட் டத்திலே, நீங்க சொல்லுரபடிதாங்க இருந்துச்சு. அந்த அண்ணாச்சி, இது சாமி குறையின்னு நெனச்சு பொங்க வச்சாங்க, ஆனா வியாதி நீங்கிய பாடு இல்லீங்க. அந்த வியாதி என்னங்க, எப்படிங்க வருது, சிகப்பு சாயத்தை யாராவது அடிச்சிட்டாங்களோ ?

கிராம சேவக்.—இந்த வியாதியை செந்தாளை என்று கூறு வார்கள். இது 'மைட்ஸ்' என்னும் சிகப்புப் பேனால் உண்டாகிறது. இந்தப் பேன் சோளத்தின் தோகையில் விழுந்தவுடன் சிகப்புப் புள்ளிகள் தோன்றும். பின்பு இது தோகையின் எல்லாப் பாகத்திலும் பரவவே ஒரே சிகப்பு நிறமாகத் தென்படும். பயிரில் பசுமைநிறம் குன்றியதினால் ரசம் தயாரிக்கும் சக்தி குறைய ஆரம்பிக் கின்றது. தோகையிலுள்ள பச்சையத்தையும், வேரின் மூலம் பூமியிலிருந்து இலைக்குவரும் உப்புப்பொருள்களை யும் இந்தப் பூச்சி சாப்பிட்டு விடுவதினால் பயிரின் வளர்ச்சி நாளுக்கு நாள் குறைந்துகொண்டே செல்லும். இவ் வியாதி தாக்குண்ட பயிரின் கதிர்கள், பால் பிடிக் காமல், சம்பி பெருத்த நஷ்டத்தை ஏற்படுத்துகின்றன.

மணியக்காரர்.—அப்படிங்களா ......

கிராம சேவக்.—இந்த வியாதி சோளப்பயிரிலே இலேசாக இருக்கும்போது நாம் சோம்பலாக இருந்துவிடக்கூடாது. பாதிக்கப்பட்ட சோளத்தட்டையிலுள்ள தோகைகளை மட்டும் காலிசெய்து குழிதோண்டி புதைத்து விட வேண்டும். இல்லாவிட்டால் இது, வேறு தோட்டங் களுக்கும் பரவிவிடும். இந்த வியாதி மீறிவிட்டால், 1 ஏக்கருக்கு 8 முதல் 10 பவுண்ட் கந்தகப்பொடியை வாங்கி, 'டஸ்டர்' மூலம் தோகையில் அடிக்கவேண்டும். வியாதி பாதிக்கப்பட்ட எல்லா தோட்டங்களிலும் ஏககாலத்தில் அடித்தால்தான் நமக்கு நன்மைதரும். நோய் பாதிக்கப்பட்ட தோட்டத்தில் மட்டும் மருந்து தெளித்து விட்டு மற்றதோட்டத்தில் தெளிக்காமல் விட்டு விட்டால், நமக்கு கணிசமான நன்மை கிடைக்காது. ஏக காலத்தில், மருந்து அடித்தால்தான், வியாதியை ஒழிக்கமுடியும்.

மணியக்காரர்.—பாருங்க, எங்க ஊருக்கு அடுத்த ஊரிலே, ஒருத்தர் தோட்டத்திலே, பூச்சிவந்து, சோளப்பூட்டிலே இருக்கிற பாலைக் குடிச்சிடிச்சின்னு, எங்க மாமன் கருப்பணன் சொன்னுங்க. அது சம்மந்தமா உங்களுக்கு ஏதாச்சும் தெரிஞ்சிருந்தால் சொல்லுங்க, அது என்னுங்க ?

கிராம சேவக்.—பட்டப்பகலிலே விழித்திருக்க விழியைப் பறித்தது போல, இந்தப் பூச்சி சோளக்கதிரில், மணி திரளவிடாமல் செய்துவிடுகின்றது. இது பச்சை நிற மாக உடல் நீண்டும், கூர்மையான மூக்கையும் உடைய தாக இருக்கும். இதை பச்சாளைப்பூச்சி என்றும், ஆங்கி லத்தில் (Cholochoris) என்றும் கூறுவார்கள். இப் பூச்சி பால் பிடிக்கும் சமயத்தில், சோள மணிகளின் மேல் உட்கார்ந்து பாலை உறிஞ்சிச் சாப்பிடும். பாலை இழந்த சோள மணிகள் திரள முடியாமல் சாவியாக மாறுகின்றன.

மணியக்காரர்—நீங்க சொல்லிக்கிட்டு வர்ர வியாதியையும், பூச்சியையும் கேட்கப் போனா, பயமாக இருக்குதுங்க. நெற்றி வேர்வை நிலத்தில் விழ பாடுபட்டு, பலன் கிடைக் காமே போனா என்ன செய்ரது. ஆகையினாலே, இனிமே நீங்க சொன்ன முறைப்படி தவறாமே நடக்கிரமுங்க. இந்தப் பாழாப்போன பூச்சியைப் போக்க மருந்து இருக்குதுங்களா ?

கிராம சேவக்.—இருக்கிறது. சோளம் பால் பிடிக்கும் சமயம் சோளக் கதிரைக் கூர்ந்து கவனிக்கவேண்டும். முதலிலே சொன்னமாதிரி அடையாளமுள்ள பூச்சி கதிரிலே தென் பட்டால் உடனே மருந்து அடிக்க வேண்டும். 1 ஏக்கருக்கு 15 முதல் 20 பவுண்ட் எக்ஸிடால் 810 அல்லது கமாக்ஸின் மருந்துப் பொடியை விவசாய ஆபீஸில் வாங்கி, கதிரின்மேல் டஸ்டரைக் கொண்டோ, துணியில் வைத்துக் கட்டியோ அல்லது மூடியுடன்கூடிய துவாரம் போட்ட டப்பாவில் போட்டோ தூவவேண்டும். மருந்து பட்டவுடன் பூச்சி களில் சில இறக்கின்றன. மற்றவை, பறந்து அடுத்த வயலுக்குச் சென்று, சேதத்தை ஏற்படுத்துகின்றன. ஆகையால், இப்பூச்சி ஒரு தோட்டத்தில் காணப்பட்ட வுடன், ஏககாலத்தில் எல்லாத் தோட்டக்காரர்களும் மருந்து தூவிவிட வேண்டும். இப்படி செய்தால் பூச்சி யின் அழிவிலிருந்து நாம் கதிர்களை காப்பாற்ற முடியும். முடிந்தவரை மூன்று தடவை மருந்து தூவுதல் நல்லது.

மணியக்காரர்—நல்லதுங்க, சிரமத்தைப் பார்க்காமே உபயோகமாகக் கூடிய புத்திமதிகளை எங்களுக்கு விளக்க மாகச் சொன்னீங்க. இதுபோல் உள்ள மத்த சங்கதியை எங்களுக்கு அடிக்கடி வந்து சொல்லனுமுங்க. உங்க யோசனைப்படியே சோளப்பயிரை நடுரமுங்க.

கிராமசேவக்.—அல்லும் பகலும் உங்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதலின் அடிப்படையில் பாடுபட்டு வரும் எங்களுக்கு இப்படிப்பட்ட தொண்டு சிரமமாகத் தெரியவில்லை. நீங்கள் சுகமாக வாழ்ந்தால் போதும். நான் கூறியவற்றில் ஏதாவது சந்தேகம் ஏற்பட்டால் அடுத்த ஊர்க்காரரையும் கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள். அவர்களுக்கு விவரமாக கூறி இருக்கின்றேன். நான் இங்கு அடிக்கடி வருவேன். என்னையும் கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள். முக்கியமாக ஒன்று கூற மறந்துவிட்டேன். நாற்றுக்களை பிடிங்கி வயலில் நடுவதற்கு முன் அவற்றை போர்டோ மிக்ஸரில் முக்கி எடுத்து நடவேண்டும். இது சர்வபோக சஞ்சீவி மருந்தைப் போன்றது. இது எந்த வியாதியையும் கண்டிக்கும். போர்டோ மிக்ஸர் தயார் செய்வதை ராமசாமிக்கு நான்கு நாட்களுக்கு முன் செய்து காட்டினேன். அவரைக் கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள். நான் போய் வருகின்றேன்.

திருவண்ணாமலை வட்டாரத்தில்

இவ் வட்டாரத்திலே, 1956, ஜனவரியில், 3 புதிய கிணறு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. குடிநீர் தேக்கத் தொட்டி அமைக்கும் வேலை ஒன்று பூர்த்தி செய்யப்பட்டது. நாகத்தாம்பூண்டியிலும், ராஜபாளையத்திலும் ஜலதாரைகள் கட்டப்பட்டன. ராஜபாளையத்திலிருந்து திருவண்ணாமலை ரஸ்தாவுக்குச் செல்லும் ரஸ்தா அமைக்கப்பட்டது. சிறந்த தீவனப்புல்லை வளர்ப்பதற்காக, கால்நடைப் பிராணிகளை வளர்ப்போருக்கு, 5,000 கினியா புல் செடிக் கன்றுகள் அளிக்கப்பட்டன. 37 டன் கம்போஸ்ட் உரம் தயாரிக்கப்பட்டது. தக்காவிக்கடனாக 6,450 ரூபாய் விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டது. 1,010 கால்நடைப் பிராணிகளுக்கு நோய்த்தடுப்பு சிகிச்சை அளிக்கப்பட்டு 30 நோயுற்ற பிராணிகளுக்கு மருத்துவ சிகிச்சையும் அளிக்கப்பட்டது. இரு வாசகசாலைகளும், ஒரு பூங்காவும் அமைக்கப்பட்டன. அபிவிருத்தி வேலைகளுக்காக மக்கள் ரொக்கமாகவும் உழைப்பு மூலமாகவும் அளித்தது 3,408 ரூபாய்.

கே. வை. குப்பம் வட்டாரத்தில்

இது, 1955, அக்டோபரில் ஆரம்பிக்கப்பட்ட புதிய வட்டாரங்களில் ஒன்றாகும். இவ் வட்டாரத்திலுள்ள எல்லா கிராமங்களிலும் விவசாய வாரம் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. இவ் வட்டாரத்திலிருந்து 23 கிராமத் தலைவர்கள், ராணிப்பேட்டை, ஆற்காடு, வேலூர், காட்பாடி, மேட்டூர், சேலம் முதலிய ஊர்களுக்குச் சென்று, விவசாய ஆராய்ச்சிக் கழகம், நிணநீர் ஆராய்ச்சிக் கழகம் முதலியவற்றைப் பார்த்தறிந்து, பாலாறுபாலம் கட்டப்படுவதையும் கண்டு களித்தனர். ஆறு கிராமங்களில், முதியோர் மாலைப் பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டன. சுமார் 648 ரூபாய் பெறுமான கதர் விற்கப்பட்டது.

ஆதாரக் கல்வி

[ஸ்ரீ வி. தேவதாசன், ஆசிரியர், பனவடலிச் சத்திரம்]

(" பிருந்தாவனமும் நந்த குமாரனும் " என்ற இசை)

ஆதாரக் கல்வியின் அருமையை நினைத்தால்
ஆனந்தங் கொள்ளுதே என் மனந்தான்—
(பரமானந்தம் கொள்ளுதே)
அண்ணல் காந்திஜிஅற்புத யுக்தியால்
ஆக்கினார் தொழில் முறைக் கல்விதான்—
(ஆதாரக்.)

கல்லாதவரின் கருத்தில் புகுத்திட்டால்
தொல்லைகள் அனைத்தும் தீர்க்காதா
நல்லோர் பலரை நம் நாட்டில் படைத்து
அல்லல்கள் அனைத்தும் அகற்றாதா—
(ஆதாரக்.)

ஏட்டுப் படிப்பினால் வாட்டமடைந்த நாம்
காட்டுவோம் கலைத்திறன் கைத்தொழிலில்—
(இரண்டுமுறை)
வீட்டுப்பணியுடன் நாட்டுப் பணியையும்
கூட்டுறவாய்க் கற்றுத் தேறிடுவோம்—
(ஆதாரக்.)

எழுத்தறிவுடன் நல்ல பகுத்தறிவையுமே
அழுத்தமாய் அறியலாம் தொழில்முறையால்
பழுத்த கிழவர் முதல் பாலர் ஈறாக
பயன் பெற முடியுமிப் புது முறையால்—
(ஆதாரக்.)

வாழ்வதற்கான வகை செய்யும் கல்வியால்
தாழ்வேது முண்டோ தரணி தன்னில்
வீழ்ந்தவன் வாழ்க்கையில் வெற்றியைக் [காண
தோள் கொடுத்துதவும் இப் புதுமுறைதான்
(ஆதாரக்.)

உதவியது இதற்காகவா ?

ஐந்தாண்டுத் திட்டங்கள்

ஸ்ரீ என். ராகவன்

1. முதல் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டங்கள்

பாட்டைக் கேளுங்க—இந்தப்
பாட்டைக் கேளுங்க
நாட்டு நலத்திருப்பணியைப்
பாட்டெழுதிக் காட்டும் இந்தப் (பாட்)

கூட்டுறவாய் முன்னேறும்
பாட்டைக் கேளுங்க—நாம்
போட்ட திட்டங்கள் பூர்த்தியாகும்
பாட்டைக் கேளுங்க
நாட்டுப்புற நகர மக்கள்
பாட்டைக் கேளுங்க—உழவர்
நஞ்செய் புஞ்செய் செழிக்க வைக்கும்
பாட்டைக் கேளுங்க (பாட்)

அஞ்சாண்டுத் திட்டமிட்டு
அணைகட்டுறார்—சர்க்கார்
அணையில்லா இடத்தில் குழாய்க்
கிணறு வெட்டுறார்
மின்சார அபிவிருத்தி
கல்வி வளர்ச்சி—மிக
மேலான சமூகநல
திட்டமும் இட்ட (பாட்)

தேசிய வளர்ச்சி
திட்டமும் இட்டோம்—சுய
தேவைப் பூர்த்தித் திட்டத்திலே
வெற்றியும் பெற்றோம்
ராஜ்யக் கைத்தொழில்
விவசாயமும்—நாட்டில்
காசுபணச் செழிப்புக்குக்
கருவிகளாகும் (பாட்)

முதலைந்து ஆண்டுத்திட்டம்
முக்கியமாகப்—பயிர்
முன்னேற்ற வேலைகளை
முழுதும் கொண்டது
அதிகத்தொழில் அபிவிருத்தியில்
அக்கறை வைக்கும்—அடுத்த
ஐந்தாண்டுத் திட்டம் நம்மை
அடுத்து வருகுது. (பாட்)

2. இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தால் ஏற்படும் நன்மைகள்

நன்மைகள் இருக்கு—நமக்கு
நன்மைகள் இருக்கு
நாட்டு சர்க்கார் போட்ட திட்டத்தில் (நன்)

மின்சாரம் எங்கும் விநியோகமாகி
விளக்கும் வெளிச்சமும் மலிவாய்க் கிடைக்கும்
புன்செயும் நன்செயும் பொன்வளம் கொழிக்கப்
பூரண சுபிட்சக் காரணமான (நன்)

தனி ஒரு நபர்க்கும் ஜாகை வசதியும்
தரித்திரம் நீங்கிய சந்தோஷ வாழ்வும்
இனி எவர்தமக்கும் வேலையிங்கில்லை
என்ற நிலைமைக்கிடமில்லை என்கிற (நன்)

அருகருகேயுள்ள கிராமங்கள் தோறும்
அஞ்சல் தபால் நிலையங்கள் தோன்றும்
சிறு சிறு கிராமத்தேவைக்குக் கூட
டெலிபோன் வசதி சீக்கிரம் கிடைக்கும் (நன்)

முதல் முதல் ஐந்தாண்டுத் திட்டங்கள் வகுத்து
முன்னேற்ற வேலைகள் முடியும் தருணம்
இதுவரையில்லா நலன்கள் ஏற்படும்
இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் வகுப்பதில் (நன்)

3. ஜாகை வசதி

குடியிருக்க ஜாகை வசதிக்கு—சர்க்கார்
கூடுமான உதவி செய்கிறார்—நாட்டு மக்கள் (குடி)

நடுத்தர வகுப்பு மக்களுக்கும்—ஏழை எளிய
குடிசைத்தொழில் விவசாயிகளுக்கும்
கடனுதவி செய்தளிக்கிறார்—வீடில்லாக்
கவலைகளை நிவர்த்தி செய்கிறார் (குடி)

கூட்டுறவு சங்கத்தினாலும்—வேறு பல
குறிப்பான ஸ்தாபனத்தாலும்
நாட்டு மக்கள் உதவி யடையவே—நமது சர்க்கார்
நாட்டமுடன் வகைகள் செய்கிறார்—அதன் படியே (குடி)

சேரிகளை அகற்றி விடவே—ஐந்தாண்டுத்
திட்டத்திலே வழி வகுக்கிறார்
ஊரிலுள்ள சேரியை மாற்றி—அங்கங்கே
உறுதியான வீடு எழுப்பியே—ஆனந்தமாய் (குடி)

4. நீர்வளம்

நீர் வளமும் நிலவளமும்
நிறைவாகுது—நம்ப
ஊர்உலகில் செழிப்புக்காலம்
உதயமாகுது—எங்கும் (நீர்)

ஆறெல்லாம் வெள்ளம் அலை மோதுது
அக்கரைக்கும் இக்கரைக்கும் பயிர் குலுங்குது
நீரெல்லாம் சமுத்திரத்தில் சேராமலே
நீள நீள அணைக்கட்டில் பயனாகுது (நீர்)

நங்கல் அணை மணி முத்தாறணை
நல்ல நல்ல மயூராட்சி பவானி அணை
துங்கபத்திரா திலையா அணை நமது நாட்டிலே
தொழிலுக்கும் உழவுக்கும் அணை கோலுது (நீர்)

ஏரி குளம் கிணறுகளில் நீர் சுரக்குது
இல்லாத போனா குழாய்க் கிணறிருக்குது
மாரி மழை தேங்கக்கண் வாயிருக்குது
வடிமுனைக்குழாய்களும் வைத்திருக்குது (நீர்)

சிறு சிறு பாசனத்தின் துணையினாலும்
செம்மையான நீர்த்தேக்க அணையினாலும்
வருஷத்துக்குப் பத்துலட்சம் ஏக்கருக்குமேல்
வாளிப்பாக சாகுபடி அதிகரிக்குது (நீர்)

மின்சாரவசதியால் தொழிலாகுது
வீடு வாசல் வெளியெல்லாம் வெளிச்சம் போடுது
புன்செயும் நன்செயும் பொன் கொழிக்குது
பூலோக சொர்க்கம் நம்மைப் பூரிப்பாக்குது (நீர்)

5. குடிசைத் தொழில்

குடிசைத்தொழிலுக்குக்
குறையொன்றுமில்லை
குடிகளுக்கது அடிப்படை. எல்லே (குடி)

படியளக்கும் வயல் பண்ணைத்தொழிலுக்கும்
பக்கபலமான வாணிபத் தொழிலுக்கும்
அடிப்படையானது குடிசைத்தொழிலே
அவசியமானதும் குடிசைத்தொழிலே (குடி)

களத்துமேட்டுப்பாய் கூடை முறங்களும்
கலப்பை கொழுமுனைகமலை கயிறுமாய்
உழவுத்தொழிலுக்கே உறுதுணையாகும்
ஓய்வு நேரத்தை ஊதியமாக்கிடும் (குடி)

வயித்தை வளப்பது விவசாயத் தொழிலே
மானம் காப்பது குடிசைத்தொழிலே
உயிரினும் மேலாக மானத்தைக்காக்கும்
உழவரை வாழ்விக்கும் குடிசைத்தொழிலே (குடி)

கிராம முன்னேற்றத்தைக் கைத்தொழில் தூண்டும்
கேட்கும் சலுகைகள் கொடுப்பதும் வேண்டும்
க்ஷேம வாழ்வுக்குத் தேவை இவையென்று
தெரிந்து சர்க்கார் துணைபுரிந்து வருகிற (குடி)

6. கைத்தறி

கைத்தறி இருக்கு—நெசவுக்
கைத்தறி இருக்கு
கட்ட துணிக்கும் கட்டமுகுக்கும் (கை)

செய்தொழில் அனைத்திலும் சிறந்ததோர்தொழில்
ஜீவனத்துக்கே இது தேவைப்படுந்தொழில்
நெய்தொழில் நாட்டில் நிலைத்த பெருந்தொழில்
நேர்த்தியான கலைவளம்மிகும் தொழிலிது (கை)

ஆடைகள் கைத்தறி அழகினைக்கண்டு
அமெரிக்க மக்களும் ஆசைப்படுகிறார்
கோடி கோடியாய் டாலர் கொடுத்திடும்
குடிசைத்தொழிலெனவே கொண்டாடி மகிழும் (கை)

கைத்தறித்தொழிலுக்குக் காப்பு அளிக்கவே
கண்ணுங்கருத்துமாய் சர்க்கார் கருதுகிறார்
தெய்விகத் தொழிலாளி நெசவாளிகளுக்கு
தேவையைப் பூர்த்தி செய்ய நினைக்கிறார் (கை)

ஜாகை வசதி செய்து கொடுக்கிறார்
சலுகைக் கடனும் வழங்கக் கருதுகிறார்
வேகமாக முன்னேற்றமடையவே
வேண்டியவசதிகள் விரும்பி உதவுறார் (கை)

மாயூரம் (மேற்கு) வட்டாரத்தில்

கோனேரிராஜபுரத்தில், ஆரம்ப சுகாதார நிலைய மொன்று, 1956, ஜனவரியில், ஆரம்பிக்கப்பட்டது. இந் நிலையத்தை 1956, ஜனவரி 31-ந் தேதியன்று தஞ்சாவூர் ஜில்லா கலெக்டர் தலைமையின்கீழ், தஞ்சாவூர் ஜில்லா வைத்திய அதிகாரி திறந்து வைத்தார். அதே தினத் தன்று, தேசிய வளர்ச்சித் திட்டத்தின்கீழ், கட்டப்பட்ட கால்நடை மருத்துவ நிலயத்தை, கால்நடை இலாகா டெபுடி டைரெக்டர் திறந்து வைத்தார். 1956, ஜனவரியில் மூன்று முதியோர் கல்வி நிலையங்கள், இரு சமூக சேவை சங்கங்கள், ஒரு சிறுவர் பூங்கா ஆகியவை ஆரம்பிக்கப் பட்டன. ஆடுதுறை விவசாய ஆராய்ச்சி நிலையத்துக்கும், வாழை ஆராய்ச்சி நிலையத்துக்கும், சுமார் 20 விவ சாயிகள் சென்று, விவசாய அபிவிருத்திபற்றி நேரில் கண்டறிந்து கொண்டார்கள்.

கிராம முன்னேற்ற ஊழியர்கள் மகாநாடு

ஸ்ரீ ஏ.வி. அருணுசலத் தொண்டைமான், காரியதரிசி—தஞ்சை ஜில்லா கிராம முன்னேற்ற ஐக்கிய சங்கம்.

ஒன்பதாவது தமிழ்நாடு கிராம முன்னேற்ற ஊழியர்கள் மகாநாடு தஞ்சைக்கு அடுத்த அருமலைக்கோட்டை கிராமத்தில் 1956-ம் ஞு ஜனவரி ஸ்ரீ 29உ காலை தமிழ்நாடு கிராம முன்னேற்ற ஐக்கிய சங்க சார்பில் நடைபெற்றது.

ஸ்ரீ K. K. சீனுவாச பிள்ளை தலைமை வகித்தார். சென்னை சர்க்கார் விவசாய அமைச்சர் ஸ்ரீ M. பக்தவத்சலம் மகாநாட்டை ஆரம்பித்து வைத்தார். புதுவை ராஜ்ய கூட்டுறவு இலாகா அமைச்சர் ஸ்ரீ ஜெ. சந்திரசேகரன் தேசியக் கொடியேற்றி வைத்தார். ஜில்லா கலெக்டர் ஸ்ரீமான்கள் எஸ். சுயம்பிரகாசம் M.L.A., M. R. ராமச்சந்திரன், M.L.A., K.S. சிவவடிவேலு உடையார், M. காளத்தி நாதன், K. M. பாலசுப்ரமணியம், (ஐந்தாண்டுத் திட்ட தென் பிராந்திய பிரசார அதிகாரி) டி. சீதாராமன் (வட்டார அபிவிருத்தி அதிகாரி), வி. ராஜமன்னுர், மற்றும் பல பிரமுகர்களும், தமிழ்நாட்டின் பல பாகங்களிலிருந்து பிரதிநிதிகளும், ஸ்தல பொதுமக்களும் பெருவாரியாக மகாநாட்டில் கலந்து கொண்டனர்.

தேசிய கொடியை ஏற்றிவைத்த ஸ்ரீ சந்திரசேகரன் பேசுகையில் கொடியின் மகத்துவத்தை எடுத்துக்கூறிவிட்டு, இக்கொடிதான் நம் எல்லோரையும் ஒருமைப்படுத்தும் சின்னம் என்ருர். மேலும், பேசுகையில் மகாத்மா காந்தியடிகளின் வழிப்படி நடக்குமாறு கேட்டுக்கொண்டார். வரவேற்புக் கமிட்டி காரியதரிசி என்ற ஹோதாவில் நான் எல்லோரையும் வரவேற்றுப் பேசினேன்.

முதலமைச்சர் ஸ்ரீ கே. காமராஜ நாடார், இந்திய அரசாங்க துணை அமைச்சர்களான ஸ்ரீ ஓ. வி. அழகேசன், ஸ்ரீமதி மரகதம் சந்திரசேகரன் மற்றும் பல பிரமுகர்களிடமிருந்தும் வந்த ஆசிச் செய்திகளை, பொதுக்காரியதரிசி ஸ்ரீ B. சீதாராமன் வாசித்தார்.

சென்னை விவசாய அமைச்சர் ஸ்ரீ எம். பக்தவத்சலம் அவர்கள் மகாநாட்டை ஆரம்பித்துவைத்து பேசுகையில்:—

திருவான்மியூர் கிராம முன்னேற்ற சங்க நடவடிக்கைகளை, தான் கவனித்து வருவதாயும், அச்சங்கம் மக்களின் நலனை கருதியே வேலை செய்து வருகிறது என்றும் தெரிவித்தார். மேலும், இச்சங்கம் தன் வேலைகளை திருவான்மியூர் வரை நிறுத்திவிடாமல் தமிழ்நாட்டில் எல்லா பாகங்களிலும் கிளைச்சங்கங்களை நிறுவி மிக்க ஆர்வத்துடன் வேலை செய்து வருகிறது என்றும் தெரிவித்தார். சர்க்காரால் ஆரம்பித்து நடத்தப்பட்டு வரும் ஐந்து வருட திட்டம் முதலிய எல்லா திட்டங்களும் கிராம மக்களின் நலனுக்காகவே ஏற்படுத்தப்பட்டன. அதை மக்கள் நன்ருக புரிந்து கொண்டு அதற்குத் தக்க ஒத்துழைப்பை அளிக்கவேண்டும். வைத்திய வசதிகள் கிராமங்களில் கிடைக்கவில்லை என்று சொல்லுகிருர்கள். ஒவ்வொரு கிராமத்திலும் ஆஸ்பத்திரி கட்டுவது என்பது முடியாது. அருகாமையிலிருக்கும் ஆஸ்பத்திரிகளுக்குத்தான் செல்லவேண்டும். பழங்காலத்தில் இருந்தபடி கிராமங்களைசுகாதாரத்துடன் வைத்துக்கொள்ள வேண்டும். அப்படி இருந்தால் வியாதிகளே வராது. மேலும் டாக்டர்கள் கிராமங்களுக்கு வந்து தொழில் செய்ய விரும்பவில்லை. அவர்கள் தங்கள் எண்ணத்தை மாற்றிக் கொள்ளவேண்டும்.

சமீபத்தில் நம் நாட்டில் பெரிய தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்படுகின்றன. அவையெல்லாம் கிராமங்களின் நலனை கருதியேதான் நடத்தப்பட்டு வருகின்றன. இதை கிராமங்களில் தொண்டு புரியும் இச்சங்கம் கிராம மக்களுக்குப் புரிய உதவவேண்டும். கிராம மக்களின் தேவைகளைக் கூடிய மட்டும் பூர்த்தி செய்யவே அரசாங்கம் முயற்சிக்கிறது. ஏனெனில், அவர்கள் பேராசை எதுவுமின்றி தங்களுக்கு அத்தியாவசியமானவைகளைத்தான் கேட்கிருர்கள். வேலையில்லா திண்டாட்டம் அரசாங்கத்தின் கவனத்தைப் பெற்றிருக்கிறது. வரப்போகும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சிறு தொழிற்சாலைகளையும் அதிகமாக ஆரம்பித்து நடத்தி இன்றுள்ள வேலையில்லாப் பிரச்னையை அடியோடு தீர்க்க திட்டமிடப்பட்டிருக்கிறது. இதில் கிராம மக்கள் தங்கள் உழைப்பின் மூலம் ஒத்துழைக்கவேண்டும்.

மேலும் பேசுகையில், இம்மகாநாடு கொண்டு வந்திருக்கும் தீர்மானங்கள் ஒவ்வொன்றும் மிக்க நியாயமானது என்றும் அவற்றை அரசாங்கம் உடனடியாக கவனிக்கும் என்றும் சொன்னுர். "கிராம மக்களின் முன்னேற்றத்திற்காகப் பாடுபடும் இந்த சங்கத் தொண்டர்களுக்கு எனது பாராட்டுதலும் நன்றியும் தெரிவிக்கிறேன்" என்று சொல்லி தமது உரையை முடித்துக்கொண்டார்.

சென்ற ஆண்டில் கிராம முன்னேற்றத்திற்கு பாடுபட்டு உழைத்தவர்களுக்கு "சிறந்த கிராமத் தொண்டர்" என்ற நற்சாட்சி பத்திரத்தை அமைச்சர் ஸ்ரீ எம். பக்தவத்சலம் வழங்கினுர்.

ஸ்ரீ கே. கே. சீனுவாசப்பிள்ளை தமது தலைமையுரையில் மேலை நாடுகளில் கிராமங்கள் அபிவிருத்தி செய்யப்படுகின்றன என்றும், நமது கிராம முன்னேற்ற ஊழியர்கள் இது போன்ற விளைவுகள் ஏற்பட முயற்சி எடுத்து வரவேண்டும் என்றும், இதுபோன்ற சங்கங்கள் கிராமவாசிகளின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவையாக இருக்கவேண்டு

மென்றும் கூறினர். ராஜ்ய இன்ஷூரன்ஸ், பயிர்கள், கால்நடை இன்ஷூரன்ஸ் திட்டங்கள் அவசியமென்றும் கூறினர். கிராமங்களில் மத்திய கூட்டுறவு பாங்கியினுல் நடத்தப்படும் சிறிய பாங்குகள் கடன் வசதியளிப்பது அவசியம் என்றும் கூறினர். வேலையின்மை பிரச்னை தீர கிராமவாசிகளுக்குச் சிறிய கைத்தொழில்களில் பயிற்சி அளிக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

ஸ்ரீ சுயம்பிரகாசம் M.L.A. பேசுகையில் பண்டைய நாட்களில் கிராம பிரச்னைகளை மக்கள் தங்களுக்குள்ளாகவே தீர்த்துக்கொள்வார்கள். கிராம முன்னேற்றம்தான் நாட்டு முன்னேற்றம், கிராம மக்கள் தங்களுக்குள் பொருமையின்றி வாழ்ந்தால்தான் சண்டை சச்சரவு இன்றி ஒற்றுமையாக வாழலாம், அப்படி இருந்தால்தான் மக்கள் ஒன்ருகச் சேர்ந்து கிராம தேவைகளை தாங்களாகவே கூடிய வரையில் பூர்த்தி செய்துகொள்ள முடியும். சர்க்கார் கொண்டுவரும் திட்டங்களை யெல்லாம் கிராம மக்கள் சரியாக புரிந்துக் கொள்வதில்லை. இதற்கு அரசாங்கமும் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். கிராமங்களில் தொண்டுபுரியும் இம்மாதிரி சங்கங்கள்தான் இப்போது சிறிது உபயோகமாக இருக்கின்றன என்று கூறி முடித்தார்.

ஸ்ரீ M. R. ராமச்சந்திரன், M.L.A. பேசுகையில் கிராம முன்னேற்ற சங்கம் செய்து வரும் வேலைகளைப் பாராட்டினர். கிராம மக்களும், சர்க்கார் அதிகாரிகளும் இச்சங்கத்தோடு ஒத்துழைத்தால் கிராம மக்களின் பல சிறிய பிரச்னைகளை சுலபமாகத் தீர்த்துக்கொள்ளலாம் என்று கூறினர்.

ஸ்ரீ K. S. சிவவடிவேல் உடையார் பேசுகையில் சங்கத்தின் முயற்சிகளைப் பாராட்டினர்.

ஐந்தாண்டுத் திட்ட பிரசார தென் பிராந்திய அதிகாரி ஸ்ரீ K. M. பாலசுப்ரமணியம் அவர்கள் பேசுகையில் ஐந்தாண்டு திட்டத்தின் கீழ் சர்க்கார் செய்துவரும் பல முன்னேற்ற வேலைகளை விளக்கினர்.

ஸ்ரீமான்கள் எம். காளத்திநாதனும், வி. ராஜமன்னரும் பேசினர். பல முக்கிய தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. ஐக்கிய சங்க உப-தலைவர் ஸ்ரீ பி. நடன சிகாமணி அவர்கள் வந்தனோபசாரம் கூறிய பின்னர் மகாநாடு இனிது முடிவுற்றது.

....சென்னை அரசாங்க விவசாய அமைச்சர் ஸ்ரீ பக்தவத்சலம் ஒன்பதாவது தமிழ் நாடு கிராம முன்னேற்ற ஊழியர்கள் மகாநாட்டை ஆரம்பித்து வைத்தார்.... ஸ்ரீ ஏ. வி. அருணசலத் தொண்டைமான் வரவேற்புரை நிகழ்த்தினர்...

மண்வெட்டி காம்புகள்

[ஸ்ரீ. அ. வை. ராமசந்திரமூர்த்தி, கிராம சேவக்]

[ஒரே நாளில் 1,000 மண்வெட்டி காம்புகளைத் தயார்செய்தாக வேண்டும் ! இப்பிரச்னையை, திருவள்ளூர் வட்டாரத்திலே, பென்னலூர் பேட்டைத் தொகுதியில் பணியாற்றிய திட்ட ஊழியர்கள் எவ்வாறு தீர்த்துவைத்தனர் என்பதை இக்கட்டுரை விவரிக்கிறது.

—ஆசிரியர்]

1954-ம் ஆண்டு எப்ரல் மாதத்தில் ஒரு நாள் காலை என் வட்டார அபிவிருத்தி அதிகாரி, என்னைக்கூப்பிட்டு, மே மாதத்தில் 800 தேசிய மாணவர் படையினர் பணியாற்ற, சில வேலைகளைக் குறிப்பிட்டு திருவள்ளூர் வட்டாரத்தில் என்னுடைய தொகுதியில் (பென்னலூர் பேட்டை தொகுதி) ஒரு முகாம் ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டார்.

அவ்வளவு பெரிய முகாமை ஏற்பாடு செய்வதிலும் முகாம் அதிகாரிகளுக்கும், மாணவர்களுக்கும் பல வசதிகள் செய்துதருவதிலும் அதிக கஷ்டங்கள் இருப்பதை நன்கு உணர்ந்தும், மக்கள் ஒத்துழைப்பு பூரணமாக கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு தைரியமாக, என் தொகுதியைச் சேர்ந்த, பங்காரு நாயடு கண்டிகை என்னும் கிராமத்தில் பல ஆண்டுகளாக பாழ் அடைந்து கிடந்த போலிசெட்டி குண்டா என்கிற ஏரியைப் புதுப்பிக்க, இந்த அரிய சந்தர்ப் பத்தைப் பயன்படுத்திக்கொள்ளும் ஆசையில், தேசிய மாணவர் படையினர் முகாமை ஏற்பாடுசெய்ய ஆவன செய்யப்பட்டன.

மேற்படி முகாம் 1954-ம் வருடம் மே மாதம் 11-ம் தேதி ஆரம்பமானது. முகாமின் தலைவர்கள், தேசிய மாணவர் படையினர் முதலியோர் பல இடங்களிலிருந்து 9-ம் தேதி யில் இருந்தே வந்து கொண்டிருந்தனர். மாணவர்கள் வேலையில் ஒத்துழைக்க இரு புல்டோசர்களும், மாணவர்க ளின் உபயோகத்திற்காக கட்டப்பாறைகள், ஷவல்கள், இரும்பு சட்டிகள், மம்மட்டிகள் வந்து இறங்கிக்கொண்டி ருந்தன.

இந்த 9–5–54 நாள் அன்று தான், எனக்கும், என் வட்டார அபிவிருத்தி அதிகாரிக்கும் ஒரு கடும் சோதனையாக இருந்தது. ஏனெனில் 9-ம் தேதியன்று இரவு 9 மணிக்கு முகாம் படையினர் கொண்டுவந்த 1,000 மம்மட்டிகளுக்குக் கைப்பிடிகள் இல்லை என்றும், அதற்கு உடனடியாகக் காம்புகள் போட்டு, 11-ம் தேதி காலை, முதல் அமைச்சர் ஸ்ரீ காமராஜர் முகாமை ஆரம்பித்து வைப்பதற்குள், எல்லா மாணவர்களுக்கும் மம்மட்டிகளை கைப்பிடியோடு கொடுத் தாகவேண்டும் என்ற பிரச்னை எங்கள் முன் எழும்பியது. 11-ம் தேதி காலை 7 மணிக்கு முதல் அமைச்சரால் முகாம் ஆரம்பம் ! மம்மட்டிக்கான கைப்பிடி காம்புகள் 1,000 தேவை என்று அறிந்ததோ 9-ம் தேதி இரவு 10 மணி !! மத்தியில் உள்ள நேரமோ ஒரேநாள்தான் !!! மம்மட்டி காம்புகளுக்கான மரத்துண்டுகள் இருக்கும் இடம் தெரியாது. மம்மட்டி காம்புகளுக்குத் தேவையான மரம் கிடைத்தாலும், அந்த நேரத்தில் கைப்பிடிகள் அமைக்கத் தொழிலாளர்கள் இருக்கும் இடமும் தெரியாது. அப்படி இருந்தும் பிரச்னையைத் தீர்க்கவேண்டும். ஏற்கெனவே முகாமின் முக்கிய அலுவல்களைக் கவனித்து அலுத்துப் போன வட்டார அபிவிருத்தி அதிகாரிக்கும், முகாமின் அமைப்பில் தீவிரமாக வேலை செய்து வந்த எனக்கும், பல எண்ணங்கள் தோன்றின.

அதே 9-ம் தேதி இரவு சுமார் 11 மணி இருக்கும். முகாம் தலைவரின் உத்தரவு பெற்று ஒரு லாரியை எடுத்துக் கொண்டு, அடுத்திருந்த அலகிரிபேட்டை கிராமம் சென்று, அந்த நள்ளிரவில் கிராம முக்கிய தலைவர்களைத் தட்டி எழுப்பி, கூட்டம் போட்டு, பிரச்னையை விளக்கி, என் ஊக்கத்தின் மிகுதியால் கிளம்பிய எண்ணத்தை ஒரு வேண்டுகோளாக, எல்லா கிராமவாசிகளும் ஒரு மணி நேரத்தில் வீட்டுக்கொரு மூன்று அடி நீள கொம்புகள் கிராம சாவடியில் சேர்க்கவேண்டும் என்று வேண்டிக் கொண்டேன். வேண்டுகோளின் பயனாக, பார்த்தேன் கிராமத்தாரின் உள்ளத்திலே எழும்பிய எழுச்சியை ! பெருமிதம் அடைந்து, பணியை நிறைவேற்ற வேண்டும் என்று மறுமுறை சொல்லி, அடுத்துள்ள பங்காருநாயடு கண்டிகை, கிருஷ்ணாபுரம் கிராமங்களுக்குச் சென்று, அதே நள்ளிரவில் கூட்டம்போட்டு, விவரங்கள் சொல்லிமுடித்தது தான் தாமதம், நானே நம்பமுடியாத அளவுக்கு கிராம மக்கள் அனைவரும் படைபோல் திரண்டு, தங்கள் தங்கள் சொந்த மரங்களிலிருந்து மம்மட்டிக்கு வேண்டிய நல்ல கொம்புகளை சில நிமிட நேரத்திற்கெல்லாம் சேர்ப்பிக்கத் தொடங்கினார்கள். அதைக் கண்ணுற்ற என் மகிழ்ச்சிக்கு எல்லை இருக்குமா ! கண்ணாரக்கண்டேன், மக்கள் ஒன்று சேர்ந்து உழைத்த காட்சியை ! அன்போடு ஏற்று செய்த பணியை ! நிலைமையை அறிந்து ஒத்துழைப்பு தந்த இந்த கிராமமக்களை வாழ்த்தாமல்தான் இருக்கமுடியுமா ? சிறிது நேரத்திற்கெல்லாம் ஒரு பெரிய குவியல். அழகான கொம்புகள். அப்படியாகச் சேகரிக்கப்பட்ட கொம்புகள், பொழுது விடிவதற்குள் முகாமிற்குக் கொண்டுவரப்பட்டன. உடனடியாக என் தொகுதியைச சேர்ந்த 6 தச்சர்கள் வரவழைக்கப்பட்டனர். அவர்கள் காம்புகளைச் செப்ப னிட்டு, மம்மட்டிகளுக்குக் கைப்பிடிகள் போட்டனர்.

குறித்த நேரத்தில் மண்வெட்டி காம்புகள் அடங்கிய மம்மட்டிகள் மாணவர்களுக்கு கொடுக்கப்பட்டன. இதனல் எங்களுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு எல்லேயே இல்லே என்ருல் மிகையாகாது. இந்தப் புரட்சிக்கு காரணம் என்ன ? மக்கள் எல்லோரும், வேண்டுகோள்விடுத்த அதே நேரத்தில், தங்கள் கூட்டு ஒத்துழைப்பை அன்போடு செய்ய தவறி இருப்பின், நிலேமையை சமாளித்திருக்க முடியுமா ? அன்பு தான் ஆர்வத்தை கிளப்பக்கூடிய ஆயுதம். உண்மை ! மக்கள் ஒத்துழைப்பும், சேவைசெய்யும் ஊழியர்களேப் புண்படுத்தாத வகையில் உணர்ச்சி ஊட்டும் அன்பு வார்த்தைகளகூறி, பணிசெய்ய முன்வரும் வட்டார அதிகாரிகளும் இருக்கும்போது என் நம் நாட்டில் சமுதாய நல திட்டமும், தேசியவளர்ச்சித் திட்டமும் மற்ற ஏனேய நல்ல திட்டங்களும் வெகுவாக முன்னேற முடியாது ?

கும்பகோணம் (வடக்கு) வட்டாரத்தில்

இவ் வட்டாரத்திலே, 1956, ஜனவரியில், 1,600 ரூபாய் குறுகிய காலக்கடனுக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. மூன்று இராப் பாடசாலேகள் ஆரம்பிக்கப்பட்டன. சமூக சேவை சங்கம் ஒன்றும், 2 சிறுவர் பூங்காக்களும் அமைக்கப்பட்டன.

மண்டகொளத்தூர் வட்டாரத்தில்

இவ் வட்டாரத்திலே, 1956, ஜனவரியில், கயிறு உற்பத்தித் தொழில் ஸ்தாபனம் ஆரம்பிக்கப்பட்டது. இவ் வட்டாரத்திலுள்ள கிணறுகளில், மீன்வளத்தைப் பெருக்க மீன் குஞ்சுகள் விடப்பட்டன.

சர்வோதயம்

ஸ்ரீ அ. வை. ராமசந்திரமூர்த்தி

கையினுல் நூற்று கதருடை அணிந்து
கிராம கைத்தொழில் அனேத்தும் தெரிந்து
எல்லா மதமும் சம்மதமே எனகொண்டு
பெண்கள் முன்னேற்றம் பெரிதும் போற்றி
குடியை அழிக்கும் மதுவினே விலக்கி
ஆதார கல்விபால் ஆக்கம் கொண்டு
முதியோர் கல்வியின் முக்யம் என்றுணர்ந்து
நம்தாய் மொழியை நலமே காத்து
இந்திய மொழியாம் பொதுமொழி அறிந்து
ஊரின் சுத்தம் உதறித் தள்ளாமல்
உடல் சுகத்தோடு ஆன்ம பயிற்சிபூண்டு
தீரமாக நின்று தீண்டாமையை ஒழித்து
சரிநிகர் சமமாம் யாவரும் என்றெண்ணி
உழுதுண்டு வாழ்வார் உழவர்பால் வாழ்ந்து
ஆருதுயர் கொண்ட ஆதிவாசிகள் முன்னேற
குஷ்டரோகிகள் மாணவர்கள் உடனும் மகிழ்ந்து [கூடி
உழைப்பினே கொடுத்து ஊதியம் பெற்று
உலகம்போற்றும் உத்தமராம் காந்தி நினேத்த
உணர்ச்சி கொள்ளாமல் உருக்கொடுக்க எண்ணி
உறுதி கொண்டு வருவீர் யாவரும்
சிறந்ததோர் சர்வோதய சமுதாயத்தினே அமைக்க
வருங்கால இந்தியாவை வளமாய் செதுக்க



கிராம ரேடியோ விழா

நீர்ப்பாசன வசதி

....ஏற்றம்....

......கிராம ரேடியோ நிகழ்ச்சிகளில், நீர்ப்பாசன வசதிகளேப்பற்றியும் விரிவுரைகள் ஒலிபரப்பப் படுகின்றன......

உயர் ரக விதையும் உபரி விளைவும்

[ஸ்ரீ நா. ரங்கராமானுசம், B.Sc., Ag., விவசாய வளர்ச்சித் திட்ட அதிகாரி, ஊத்துக்கோட்டை.]

[ஒட்டுக்கிச்சிலி எனப்படும் டி.கே.எம். 6 நெல் ரகத்தின் மேன்மையை இக்கட்டுரை எடுத்துக்காட்டி, கூடுதலாக நெல்லை விளைவிக்க பொறுக்கு விதைகளை உபயோகிப்பது மிகவும் அவசியம் என்பதை வலியுறுத்துகிறது.

—ஆசிரியர்]

" ஏரினும் நன்று லெருவிடுதல் கட்டபி
னீரினும் நன்றதன் காப்பு.",

என்ற வள்ளுவரின் வாக்கின்படி, " பயிரிடுங்கால் உழுதலைக் காட்டிலும் எருவிடுதல் முக்கியம் ; உழவு, எரு விடுதல் இவற்றைச் செய்து, அப் பயிரைத் தக்க முறையில் காத்தல், அதற்கு நீர்ப்பாசனம் செய்வதைக் காட்டிலும் அதிமுக்கியம்," என்ற உண்மை யாவரும் அறிந்ததே. இயற்கையன்னையின் சீற்றத்தால் பருவ மழை குன்றியும், பயிருக்கு நமனுய் வந்த நோய்களும், பூச்சிகளும் மலிந்துவிட்ட இக் காலத்தில், மேற்சொன்ன முறைகளோடுகூட, உழவினர் கவனிக்கவேண்டியது மற்றும் ஒன்றுளது. அதுதான், காலத்துக்கும், வட்டாரத்துக்கும் தக்கபடி, அரசினர் ஆராய்ச்சி நிலையங்களிலிருந்து வெளியிடப்படும், புதுரக விதைகளைப் பயன்படுத்துவதாகும்.

புதுரக விதைகள்

இவை இரண்டு வகைப்படும். ஒன்று அந்தந்த வட்டாரத்திலுள்ள விதை வகைகளையே ஆராய்ச்சிப் பண்ணைகளில் சுத்தப்படுத்தி கலப்பில்லாமல் செய்து பொறுக்கு

...பாபநாசம் தென் சரக தேசிய வளர்ச்சித் திட்டத்தின் கீழ், அருமலைக்கோட்டை கிராம முன்னேற்ற சங்க அங்கத்தினர்களும், கிராமவாசிகளும், அருமலைக்கோட்டை, சடையார்கோவில் பாதை அமைப்பு வேலையில் ஈடுபட்டனர்......

விதைகளாக வெளியிடுதல். மற்றொன்று ஒட்டுச் சேர்த்த பொறுக்கு விதை. அநேகமாக ஒவ்வொரு ரக விதையிலும் நமக்கு வேண்டியனவும் வேண்டாதனவுமான குணதிசயங்கள் உண்டு. இரண்டு ரக விதைகளை ஒட்டுச் சேர்த்து, அவையிரண்டிலுள்ள நமக்கு வேண்டிய குணதிசயங்களை மாத்திரம் உடைய ஒரு விதை ரகத்தை உற்பத்தி செய்வதே மேற்சொன்ன இரண்டாம் ரகம். உதாரணமாக ஜி.இ.பி. 24 எனப்படும் இச்சிலி சம்பாவின் உயர்ந்த தரமும், கோ. 18 எனப்படும் வெள்ளைக்காரின் குறுகிய காலமும் ஒன்று சேர்ந்து டி.கே.எம். 6 எனப்படும் ஒட்டுக்கிச்சிலி (சன்ன சொர்ணவாரி) நெல்லின் மூலம் வெளிவந்துள்ளன.

கிராம விதைப் பண்ணை

உயர் ரக விதைகள் சாதாரணமாக அந்தந்த வட்டாரத்திலுள்ள பழைய விதைகளைக் காட்டிலும் நூற்றுக்கு 20 சதவிகிதம் கூடுதலான மகசூலைத் தரும். தேசிய வளர்ச்சித் திட்டம், சமுதாய நலத் திட்டம் ஆகியவை நிறைவேற்றப்படும் கிராமங்களிலாவது, மூன்றாண்டுகளுக்குள், பொறுக்கு விதைகளை பரவச் செய்ய வேண்டும் என்பதே அரசினரின் நோக்கமும், திட்டமும் ஆகும். இதற்கான விதை பூராவும் அரசினரால் கொடுக்க இயலாது. ஆகவே ஒவ்வொரு கிராமத்திலுள்ள இரண்டொரு உழவர்களிடம் முதல் ஆண்டு இத்தகைய உயர் ரக விதைகளைப் பயிரிட்டு, உற்பத்தியான விதைகளை அந்தந்த கிராமத்தில் எல்லா உழவர்களுக்கும் விநியோகிக்க வேண்டும். இதுவே அரசினரின் " கிராம விதைப் பண்ணைத் திட்டம் ".

ஊத்துக்கோட்டையில் பொறுக்குவிதை விநியோகம்

நெல், பருத்தி, கேழ்வரகு முதலிய பலவற்றுள் பல உயர் ரக விதைகள் வெளியிடப்பட்டபோதிலும் அவை யாவற்றைப் பற்றியும் விளக்கம் கூறுவதோ, ஆராய்வதோ, இச்சிறிய உரையின் நோக்கமன்று. ஊத்துக்கோட்டை தேசிய வளர்ச்சித்திட்ட வட்டாரத்தில் இத்திட்டம் எப்படி அமுலாக்கப்படுகிறது என்பதுபற்றி ஒருசில வார்த்தைகள்: திட்ட ஆரம்பமுதல், இவ்வட்டாரத்தில் ஓராண்டு காலமாக 5,210 ராத்தல் (32 மூட்டைகள்) அளவு பல தரப்பட்ட பொறுக்கு விதைகள், கிராம விதைப் பண்ணைகளுக்காக 21 கிராமங்களில் விநியோகிக்கப்பட்டன. விவசாய இலாகாவின் கிராம விதைப் பண்ணைத் திட்டப்படி இவை இனப்பெருக்கமடைந்து, அந்தந்த கிராமங்களிலும் பரப்பப்படுகின்றன.

டி.கே.எம். 6 நெல் விதையின் மேன்மை

இவ்வட்டாரத்தில் கொடுக்கப்பட்ட பல ரகங்களுள், இங்குள்ள உழவர்களால் பெரிதும் விரும்பப்பட்டது ஒட்டுக்கிச்சிலி (சன்ன சொர்ணவாரி) எனப்படும் டி.கே.எம். 6 நெல்லே. இது திரூர் ஆராய்ச்சிப் பண்ணையிலிருந்து வெளிவந்த ஆறும் ரகம். இதன் வயதை, நாற்றங்கால் உட்பட 115 முதல் 120 நாட்கள் வரை வரையறுக்கலாம். இது கார் சாகுபடி காலமாகிய தை மாதத்திலும், சொர்ணவாரி சாகுபடி காலமாகிய சித்திரை மாதத்திலும் அமோகமாகப் பயிராகிறது. ஏக்கர் ஒன்றுக்குக் குறைந்தது 4,000 ராத்தல் (25 மூட்டைகள்) தருவதோடு விலையும் அதிகம் விற்கிறது. சாதாரணமாய் இதனுடன் விளையும் மற்ற கார், சொர்ணவாரி வகைகள் மூட்டை ஒன்று ரூ. 17 விற்கும்போது, இந்த நெல் மூட்டை ஒன்று ரூ. 22 விற்கப்பட்டது என்றால் இதன் சிறப்பை யாவரும் உணரலாம்.

விளைச்சலைப்பார்த்து விவசாயிகள் அடைந்த மகிழ்ச்சி

சென்ற சித்திரை மாதத்தில் இந்த ரக விதை, இவ்வட்டாரத்தில் பரவலாக உள்ள திருக்கண்டலம், ஊத்துக்கோட்டை, வேலூர் என்ற மூன்று கிராமங்களில் 625 ராத்தல் அளவுக்குக் கொடுக்கப்பட்டது. முதலில் அவ்வளவு ஆதரவு தரப்படவில்லையானாலும், இது கதிர்களுடன் அறுவடைக்குத் தயாராய் ஆடி அசைந்தபோது இதைக் கண்டோர் மனமகிழ்ந்தனர். ஊத்துக்கோட்டை கிராம விதைப் பண்ணையிலிருந்து விளைந்த டி.கே.எம். 6 விதை, 1955ஆம் நவம்பர்மீ 11௳ அன்று ஊத்துக்கோட்டையில் கூட்டுறவு வாரத்தின்கீழ் நடத்தப்பட்டக் கூட்டத்தில், கூட்டு அபிவிருத்திக் கமிஷனர் ஸ்ரீ வெங்கடாசலபதி அவர்களாலும், 1956ஆம் ஜனவரிமீ 18௳ அன்று வெங்கல் கிராமத்தில், உழவர்-வார விழாக்கூட்டத்தில் விவசாய அமைச்சர் ஸ்ரீ M. பக்தவத்சலம் அவர்களாலும் மேற்கண்ட கிராமங்களிலுள்ள உழவர்களுக்கு விநியோகிக்கப்படும் பேறு பெற்றது.

இவ்வாறாக 625 ராத்தல் அளவோடு இந்த வட்டாரத்தில் நுழைந்த டி.கே.எம். 6 என்னும் ஒட்டுக்கிச்சிலி, இவ்வோராண்டு காலத்தில், வெகுவாக இனப்பெருக்கமடைந்து, இது வரை சுமார் 9,000 ராத்தலுக்கு (56 மூட்டைகள்) மேல், விதைகளாக விநியோகிக்கப்பட்டது. இதனை உபயோகித்தவர்களுக்கு, இது மிக்க லாபம் அளிப்பதால், இன்னும் ஓராண்டு காலத்தில் இவ் வட்டார முழுமையும் இது பரவிவிடும் என்ற நம்பிக்கை இருக்கிறது.



தெடாவூர் கிராமத்தில், சிறுவர் பூங்காவை, சேலம் ஜில்லா கலெக்டர், 1956-ஆம் ஜனவரிமீ 4-ந் தேதி யன்று திறந்துவைத்தார்.

Printed by the Superintendent, Government Press, Madras, Edited by the Public Relations Officer and published by the Director of Community Development, Government of Madras.

...MARA PUBLIC LIBRARY